**காணாமல் போன லயன் எயார் விமானம்**

# சொல்லாத இன்னொரு சேதி!

சொல்லாத இன்னொரு சேதி!
சொல்லாத இன்னொரு சேதி!
சொல்லாத இன்னொரு சேதி!

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக
ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமல்போன லயன்எயார் விமானம்

# சொல்லாத இன்னொரு சேதி !

தகவல் அறிக்கை : 19

வெளியிடப்பட்ட திகதி : 16.10.1998



**மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LIONAIR FLIGHT 602 FROM JAFFNA:

## CROSSING THE BAR INTO THE TWILIGHT OF SILENCE

**Infomation Bulletin : 19**
**Date of Release : 16th October '98**

**கொடியவர்கள் இழைக்கும்**
**தீங்குகளிலும் பார்க்க,**
**அவற்றை நல்ல மனிதர்கள் என்போர்**
**அதிர்ச்சியூட்டுமளவிற்கு மௌனமாய்**
**சகித்துக் கொண்டிருப்பது பற்றியே**
**நாம் இந்தத் தலைமுறையில்**
**வருத்தமுறவேண்டும்.**
- மார்ட்டின் லூதர் கிங் -

Published by:
UNIVERSITY TEACHERS FOR
HUMAN RIGHTS (JAFFNA)
UTHR(J)

Printed at:
**WASALA PUBLICATIONS**
153, Saranankara Road,
Dehiwala.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணாமல்போன லயன்எயார் விமானம் சொல்லாத இன்னொரு செய்தி !

யாழ்ப்பாணத்திலிருந்து 48 பயணிகளுடனும் 7 விமானப் பணியாளர்களுடனும் 29.9.98 மாலை 1.40 மணிக்குப் புறப்பட்ட லயன் எயார் விமானம் காணாமல்போன அதிர்ச்சிச்செய்தி கிளிநொச்சி தாக்குதல்கள் மத்தியில் வெளிவந்தது. டெய்லிநியூஸ் பத்திரிகை ஒக்டோபர் 1ம் திகதி செய்தியின்படி, பாதுகாப்புப்படையினர் புலிகளின் தொடர்பு சாதனசெய்தியை ஒற்றுக் கேட்டதாகவும், புலியுறுப்பினரொருவர் மன்னார்க்கடலில் விமானம் நொருங்கி விழுந்த செய்தியை வெற்றிக்களிப்புடன் அறிவித்ததாகவும் கூறப்பட்டது. ஆனால், மக்கள் அதனை சந்தேகக்கண்ணுடன் நோக்கினர். அதேநாள் பேசாலையைச் சேர்ந்த மீனவர்கள் விமானம் கடலில் வீழ்ந்ததை கண்டதாக மன்னார் கச்சேரி உத்தியோகத்தர்கள் கூறியதை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை வெளியிட்டிருந்தது. விமானத்தில் பயணம் செய்த வங்காலையைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவிகள் இருவரின் பெற்றோர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுடைய தேவாலய பிதா தேவசகாயம்பிள்ளை நடந்தசம்பவம் பற்றி அறிய புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்றார் எனவும் உதயன் செய்தி வெளியிட்டிருந்தது. அத்துடன் புளொட் இயக்கத்தினர் புலிகளைக்குற்றம் சாட்டியிருந்த் செய்தியையும் உதயன் பிரசுரித்திருந்தது.

மறுநாள், 2.10.98 திகதிய உதயன் பத்திரிகையிலும் தேவாலய பிதா தேவசகாயம்பிள்ளை அவர்கள் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்றுவந்த செய்தி வெளிவந்திருந்தது. அன்றுமாலை பிதா தேவசகாயம்பிள்ளை, BBC தமிழ்ச்சேவைக்கு அளித்திருந்த பேட்டியும் ஒலிபரப்பாயிருந்தது. பிதா தேவசகாயம்பிள்ளை மீனவர்களுடனும் ஒரு அரச உத்தியோகத்தருடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியிருக்கிறார். இதன்படி, இரு மீனவர்கள் இரணைதீவுக் கடலுக்குள் விமானம் எரிந்தபடி விழுந்ததை கண்டிருக்கிறார்கள். முதலில் அதுவொரு குண்டுவீச்சு விமானமெனக் கருதியிருந்தனர். வேறு மீனவர்களும் இச்சம்பவத்தைப் பார்த்துள்ளனர். இதன்பின் 6 சடலங்கள் மோசமான நிலையில் வாலப்பாடு பகுதியில் கண்டெடுக்கப்பட்டு புதைக்கப்பட்டது. குமாரசாமி ரகுநாதன் என்னும் பயணியின் அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு பிதா தேவசகாயம்பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. இதன் பின்னரும் விமானம் விழுந்தது ஒரு மர்மமாகவே பேசப்பட்டது.

இச்சம்பவத்திற்குச் சில நாட்களிற்கு முன்னர் புலிகளின் அரசியல் பிரிவினர் எனக் கூறிக்கொண்ட துண்டுப்பிரசுரமொன்று யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்பட்டது. விமானப் போக்கு வரத்தை புலிகள் தொடர்ந்து எச்சரிக்கை செய்ததைக்காட்டி EPRLF இயக்கத்தினர் புலிகள்தான் விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாகக் குற்றம்சாட்டியிருந்தனர். ஒக்டோபர் 3ம் திகதி மாலை BBC வானொலிச் செய்தி பின்வருமாறு தெரிவித்தது.

*"அரசுக்கு ஆதரவாக இருக்கும் இரு தமிழ்க்குழுக்கள் புலிகள் விமானத்தைச்சுட்டதாக குற்றம்சாட்டியிருந்தனர். புலிகள் விமானநிறுவனத்தின் யாழ் அலுவலகத்திற்கு விமானச்சேவையை நிறுத்தும்படி கடிதங்கள் அனுப்பியதை இக்குழுக்கள் காரணம் காட்டுகின்றனர். ஆனால் இவர்கள் கூறுவதற்கு எந்தவிதச் சாட்சியங்களுமில்லை. யாழ்ப்பாணத்தை 1995 வரை கட்டுப் பாட்டில் வைத்திருந்த புலிகள் யாழ்ப்பாணம் சகஜநிலைக்குக் கொண்டுவருவதற்கான அரசின் முயற்சிக்கு தடைபோட எத்தனிப்பது உண்மைதான். எனினும் அவர்கள் இத்தகைய வொரு நடவடிக்கையை இதுவரை எடுக்கவில்லை. இவ்விமானச் சேவையின்மூலம் தினமும் 400 பயணிகள்வரை பயணம் செய்துவந்தனர். இச்சம்பவத்தினால் குடிநீர்சேவை புனருத்தானம், கண்ணிவெடி நீக்குதல் போன்ற அத்தியாவசிய சேவைகளும் தடைப்படநேரும்....."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EPRLF, PLOT கூறுவது பக்கச் சார்பானதும் உண்மையற்றது மென்றே கருதப்பட்டது. ஓர் அந்நிய நாட்டவரின் பார்வையில், அரசு யாழ்ப்பாணத்தில் தன்னை நிலைப்படுத்த பிரயத்தனம் செய்வதற்கு புலிகள் குந்தகமாக இருப்பது வேறு. ஆனால் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவதாகக் கூறிக்கொள்ளும் இயக்கம் அதே மக்கள் பிரயாணம் செய்யும் விமானத்தைச்சுட்டு வீழ்த்தியிருப்பர் என அவர்கள் நம்பவில்லை. ஆனால் வியப்புக்கு உரிய விடயம் ஏதெனில், புலிகளின் மேலான பலமான குற்றச்சாட்டு சற்றும் எதிர்பாராத வட்டாரங்களிலிருந்து வந்திருப்பதே.

உதயன் பத்திரிகை ஒக்டோபர் மாதம் 4ம் திகதி "எதிர்பாராத இடி" எனும் தலைப்பில் ஆசிரிய தலையங்கம் தீட்டியது. மக்களின் பொதுவான மனோபாவத்தை இது படம்பிடித்திருந்தது. இவ் விபரீத சம்பவங்களின் கராணங்களைப் பற்றிய பத்திரிகையாசிரியரின் விபரிப்பு இரட்டையர்த்தம் தொனித்ததாக இருந்தது. "நீண்ட காலமாக துன்பங்களின் எல்லைக்கே போய்விட்ட மக்களுக்கு இரணைதீவு நிகழ்வு மேலும் ஓர் இடியாக வீழ்ந்துள்ளது." விமானம் வீழ்ந்ததற்கான காரணம் இன்னும் தெரியவில்லை தொழில் நுட்பத்தவறு காரண மாயிருக்கலாம் அல்லது விமானம் சுடப்பட்டிருக்கலாம் என ஆசிரியர் தெரிவித்திருந்தார். இச்சம்பவங்களின் காரணங்களைக்கண்டறிவது கடினமெனவும் விமானப்படையினரின் அன்ரனோவ் விமானம் நீர்கொழும்பில் விழுந்தசம்பவம் பற்றி இன்னும் அறியப்படவில்லையென்றும் அவர் எழுதியிருந்தார்.

ஆனாலும் பத்திரிகையாசிரியர் தனது முடிவுரையில் தனது பேனாவின்போக்கைக் கட்டுப்படுத்த முடியாதவர்போல் யாழ் மக்களின் பொது மனோநிலையை பச்சையாக வெளிக்கொணர்ந் தார். யாழ்குடாநாட்டின் போக்குவரத்திற்கு விமான மொன்றே ஒரேவழியாயிருந்ததென்றும் அவர் தெரிவித்திருந்தார். விமான சேவை நிறுத்தப்படப்போகிறதென்ற வதந்திகள் கூறப்பட்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் யாரும் இவ்வித அராஜகத்தை எதிர்பார்க்கவில்லையெனவும், இரணைதீவு நிகழ்விற்கு எக்காரணமிருப்பினும் இதற்குப்பொறுப்பானவர்கள் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிப்பது மட்டுமல்ல அவர்கள் கடும் கண்டனத்துக்குரியவர்களும் கூட என அவர் முடித்திருந்தார்.

பத்திரிகையாசிரியரின் மனோநிலை இங்கு மிகத்தெளிவு. இச்சம்பவத்தின் காரணிகளில் இரண்டை அவர் தெரிந்தெடுத்திருக்கிறார். ஒன்று தொழில் நுட்பத்தவறு. மற்றது விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கலாம். தொழில்நுட்பத்தவறு காரணமெனில் அது இயந்திரக் கோளாறு அல்லது தற்செயலான மனிதத் தவறு. இவ்வாறான காரணங்களுக்கு அராஜகம், எதிர்ப்புணர்வு, கண்டனம் போன்ற கடும்வார்த்தைகள் அவசியமில்லை.

உதயன் பத்திரிகைக்கு நெருக்கமானவர்களின் தகவல்களின்படி, பத்திரிகையாசிரியர் தான் எப்படி இதனை எழுதுவது என்பது பற்றி மிகவும் மனம் உழன்று போயிருந்தாரெனத் தெரிகிறது. "*அப்பாவி மக்கள் சென்ற விமானத்தைச் சுட்டுவீழ்த்துவது ஏற்றுக்கொள்ளப்படமுடியாதது. நான் இதைப்பற்றி ஏதாவது கூறியாகவேண்டும்*" என அவர் கூறியதாகவும் எங்கிருந்து தொடங்குவது என்பதை முடிவு செய்ய முடியாத பட்சத்தில் அவர் தனது பேனா போகும் போக்குக்கே விட்டு விட்டதாகவும் அதன் காரணமே இவ்வாறான ஆசிரியத் தலையங்கமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

1986 மத்தியிலிருந்து உதயன் புலிகளின் கண்காணிப்புக்குள்ளிருந்தே எழுதியது. அநேகமான தமிழ் மக்களின் நிலை போல உதயனும் தன்னைப் பாதுகாத்துக்கொண்டு எழுதப்பழகி விட்டது. இதிலிருந்து மீறுவது ஒரு பகீரதப் பிரயத்தனமே. ஆனாலும் தனக்குத் தெரிந்ததையோ, தான் உணர்வதையோ எழுதாமல் தவிர்ப்பது தனது சுயகௌரவத்திற்கு இழுக்கு என அக்கணம் ஆசிரியர் கருதியதால் தனது வழமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணியையும் மீறி தடை செய்யப்பட்டதாகக் கருதப்படும் எழுத்து வழக்குகளுள் சென்றிருக்கிறார். இதன் விளைவே இவ்வாறான தலையங்கம். தமிழ் மக்களின் வாழ்வை ஆதிக்கம் செலுத்தும் சக்தியின் மனோ நிலையை நன்கு புரிந்துகொண்ட தமிழரொருவரிற்கும், எவ்வித சாட்சியங்களும் இல்லையெனக் கூறி புலிகளின் பங்கை நிராகரிக்கும் மேற்கத்தைய நாட்ட வரிற்கும் இடையேயுள்ள எடைபோடும் திறனை இங்கு நாம் அவதானிக்கமுடியும். தமது மக்களை ஏற்றிச் செல்லும் விமானத்தை புலிகள் சுடமாட்டார்கள் என்பது மக்களின் ஓர் அற்ப ஆசையுடனான எதிர்பார்ப்பு. ஆனாலும். இவ்வாறான செயல்களை புலிகள் செய்யக் கூடியவர்களென்பதையும் தமது கடந்தகால அனுபவங்களின் மூலம் மக்கள் அறிவர். ஆச்சரிய மென்னவென்றால், இரணைதீவு விமான நிகழ்விற்கு மக்களிற்குப் பதில் சொல்ல வேண்டிய இருவர் - அரசும், புலிகளும் - இங்கு மௌனமாக இருப்பதே. இவர்கள் எதையோ மறைப்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

## நிகழ்வுகளின் தொடர்வு

*1998 ஆகஸ்ட் 09* - யாழ்ப்பாணத்திற்குச்சென்று வரும் லயன் எயார், மொன்றா இருவிமானக்கம்பனிகளும் புலிகளிடமிருந்து வந்ததாக நம்பப் படும் கடிதங்களைப் பெற்றன. இதன்படி, பாதுகாப்புப் படையினரை விமானம் ஏற்றி இறக்குவதாகப் புலி குற்றம்சாட்டியிருந்தது. எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

*செப்டெம்பர் 13* - புலிகளின் யாழ். அரசியல் பொறுப்பாளர் தூயவனின் கையெழுத்திடப்பட்டதாக கூறப்படும் கடிதமொன்று லயன்எயார் முகாமையாளரிடம் கையளிக்கப்பட்டது. இதன் தலையங்கம், "தாக்குதலுக்கான எச்சரிக்கை." அக்கடிதத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"விமானச்சேவையினரின் நடத்தைபற்றி நாம் ஏற்கனவே உங்களிற்குக் கடிதம் அனுப்பியிருந்தோம். நீங்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதை விடுத்து நீங்கள் தொடர்ந்தும் பாதுகாப்புப்படையினரிற்கு ஒத்துழைக்கிறீர்கள். எனவே இக்கடிதம் கண்டவுடன் மறு அறிக்கை வரும் வரையும் விமான சேவையை தற்காலிகமாக ரத்துச் செய்யுமாறு உங்கள் மேலிடத்திற்குத்தெரியப்படுத்தவும். இதை மீறினால் உங்கள் விமானம் தாக்குதலுக்காளாகி தமிழ் மக்களிற்கு ஆபத்து நேரிடும் பட்சத்தில் நீங்களே முழுப் பொறுப்பையும் எடுக்க வேண்டியதுடன் அதற்குரிய தண்டனையையும் நீங்கள் அனுபவிக்கவேண்டிவரும். செப்டெம்பர் 15ம் திகதிக்குப்பின் பறக்கும் விமானங்கள் எங்கள் தாக்குதலுக்குள்ளாகும். இவ்விடயத்தை மனத் துயரத்துடன் உங்களுக்கு அறியத்தரும் இவ்வேளையில் தமிழ் மக்களுக்கும் துண்டுப்பிரசுரம் மூலமாக இதனை அறிவிக்கிறோம்."*

செப்டெம்பர் 17 - மொனாரா விமானச் சேவை ரத்து. தமிழ் மக்களின் விடுதலையாளர்களென்று கூறிக்கொள்ளும் இயக்கம் இவ்வாறான எச்சரிக்கையை விடுவது நியாயமற்றதென EPRLF இயக்கம் 18.9.98 உதயன் பத்திரிகையில் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தது. அவ்வறிக்கையின் சாராம்சம் வருமாறு -

*"கல்வி, மருத்துவம், குடும்ப சமூக உறவுகளிற்கு விமானசேவை அத்தியாவசியம். ராணுவம் பயன்படுத்துவதால் விமான சேவையை ரத்து செய்ய வேண்டுமெனக் கூறுவது அங்கீகரிக்கப்படமுடியாதது. ஏனெனில் மக்களுடைய வாழ்வின் அடிப்படைத்தேவைகளை விமான சேவையொன்றே பூர்த்திசெய்கிறது. அது நிறுத்தப்பட்டால், மக்கள் வாழ்வு மிகக் கடினமாகிவிடும்.*

செப்டெம்பர் 23 - லயன் எயார் முகாமையாளரை ராஜினாமாச் செய்யக்கோரி புலிகள் அனுப்பியதாக கூறப்படும் கடிதமொன்றை முகாமையாளர் பெற்றார்.அவரும் ராஜினாமாச்செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்டெம்பர் 24 - புலிகளின் அரசியல் பிரிவிலிருந்து மணிமாறன் கையெழுத்திட்ட கடிதமொன்று உதயனில் பிரசுரமாக அனுப்பப்பட்டது. அதன் தலையங்கம், "மக்களுக்கு ஒரு வேண்டு கோள்". மக்களை விமானப்பயணத்தை மேற்கொள்ளவேண்டா மென கேட்கப்பட்டிருந்தது. அக்கடிதம் பிரசுரிக்கப்படவில்லை.

அதே நாள், "பொது மக்களுக்கு எச்சரிக்கை" என்ற தலைப்பில் சுவரொட்டியொன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரி வாசலில் ஒட்டப்பட்டிருந்தது. வியாபாரிகள் சங்கம், யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றிற்கும் விமானத்தில் பயணம் செய்ய வேண்டாமென எச்சரித்துக் கடிதம் வந்ததாகக் கூறப்பட்டது. (வியாபாரிகள் சங்க உறுப்பினர்கள் யாரும் சம்பவம் நடந்த தினத்தன்று பயணம் செய்யவில்லை).

செப்டெம்பர் 29 - டொன் பொஸ்கோ மாணவர்கள் 20 பேர் 30.9.98 அன்று திருமலை நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்ள கொழும்பு பயணமாகவிருந்தனர். பாடசாலைக்கு வாய்மொழியாகவோ, கடிதம்மூலமாகவோ எச்சரிக்கை வந்திருக்க வேண்டும். 29.9.98 அன்று 12.30 மணிக்கு லயன் எயார் இருக்கைகள் அனைத்தையும் பாடசாலை ரத்து செய்துவிட்டது. அதேதினம் 1.40 மணிக்குப் புறப்பட்ட விமானமே வீழ்ந்தது.

யாழ். மக்களுக்கு ஒரு வேண்டுகோள் என்ற தலைப்பில் புலிகளின் அரசியல்பிரிவு வெளியிட்டதாகக் கூறப்படும் பிரசுர மொன்று யாழ், குடாநாட்டில் இதற்கு முன்னரே வினியோகிக் கப்பட்டது. கீழ்க்கண்ட பந்தி அப்பிரசுரத்தில் அடங்கியிருந்தது-

*"தமிழ் மக்களுக்குப்பாதை திறந்துவிடுகிறோம், பயணவசதிகள் செய்துதருகிறோம் என்ற சாக்கில் ராணுவம் தனது நலன்களைப் பெருக்கி வருகிறது. விமான சேவையை மக்களுக்குச் செய்கிறோம் என்ற சாட்டில் மக்களிடம் பெருந் தொகைப் பணத்தை அறவிடுவது மட்டுமல்லாது, தங்களது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ராணுவ குறிக்கோள்களையும் அது நிறைவேற்றுகிறது. எனவே விமானப்பயணத்தைத் தடை செய்வதும், தடையை மீறுவோரைத் தண்டிப்பதும் அவசிய மாகிறது. பயணம் செய்வோர் எதிர்காலத்தில் விமானப் பயணத்தையும், கடற்பயணத்தையும் தவிர்ப்பது பாதுகாப்பானது."*

இந்த எச்சரிக்கையைப் புரிந்து கொண்ட பெரும்பான்மையான தமிழ்மக்களிற்கு இத் துயரச்சம்பவத்தின் பின்னணி நன்கு விளங்கும். மன்னார் கச்சேரிச் செய்திகளும், பிதா தேவ சகாயத்தின் வாக்குமூலமும் இதற்கு ஆதாரமாக இருக்கின்றன. விமானம் புலிகளால் சுடப்பட்டதற்கான பலமான சான்றுகள், பல்வேறு தரப்பினர்களின் தகவல்களை தொகுத்து ஆராயும் போது எம்மால் ஊர்ஜிதபடுத்த முடிகிறது.

## புலிகளின் மௌனம்

விமானம் வீழ்ந்த செய்தி அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவுக் கச்சேரிக்கு பேசாலை மீனவர்களால் தெரியப்படுத்தப் படுத்தப்பட்டது. பிதா தேவசகாயம்பிள்ளை இரணைதீவுக்குச் சென்றது வங்காலையைச் சேர்ந்த பெற்றோர்களின் வேண்டுகோள்களிற்கிணங்கவே. BBC தமிழ்ச்சேவைக்கு அவர் அளித்தபேட்டி விபரதானமாயிருந்ததாயினும், அவரது பிரயாணத்தின் முக்கியபகுதி பற்றிய அவரின் மௌனமும் கவனிக்கத்தக்கது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் அவர் சென்றபோது அவரது சகல நடவடிக்கைகளும் புலிகளால் அவதானிக்கப்பட்டிருக்கும். புலிகளோ, அவர்களது உளவுப் படையினரோ நேரடியாக அவ்விடத்தில் இருந்திராவிடினும், புலிகள் பின்னர் தமது கையாட்களையனுப்பி மீனவர்களிடமிருந்தும் அதிகாரிகளிடமிருந்தும் அவர்கள் பிதா தேவசகாயத்திடம் என்ன சொன்னார்களென்பதை அறிந்திருக்க முடியும். பிதா தேவசகாயமவர்களும் புலிகளுடன் பேசியிருக்க வேண்டுமெனினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அதைக்குறிப்பிடவேயில்லை. ஒரு தேவாலய பிதாவா யிருந்தபடியினால் பலியடைந்தோரின் உறவினர்கள் வந்து தமது உடன்பிறந்தோரின் உடல்களை அடையாளம் கண்டு கிரியை செய்வதற்கான நடவடிக்கைகளை யெடுப்பதற்கு அவர் முயற்சித் திருப்பார். இதன் முக்கியத்துவத்தை உதயன் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் பின்வருமாறு பிரதிபலித்தது:

*...தங்கள் உயிருக்கு உயிரானவர்களின் உடலையாவது இறுதிமுறை பார்க்கமுடியாத மனவேதனையில் கண்ணீர் சிந்திநிற்கும் குடும்பத்தின் நிலை கல்மனம் கொண்டவர்களையும் கசியவைக்கும் .*

பிதா தேவசகாயம் பிள்ளை அவர்கள் பொதுஅரங்கில் எதுவும் சொல்ல விரும்பாவிடினும் பலியடந்தவர்களின் குடும்பத்தினர்கள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள விபத்து நடந்த இடத்திற்கு இறுதிக்கிரியைகள் நடாத்தச் செல்வதுபற்றி அவரிற்குமேலான குருவானவரிடமாவது ஏதாவது கூறியிருப்பார். ஆனால் எதுவும் வெளிவரவில்லை. மறுபுறத்தில் விமானம் வீழ்ந்ததிலிருந்து அனைத்தையும் புலிகள் பார்த்துக்கொண்டிருந்தனர். மீனவர்கள் பிதா அவர்களிற்குக் கூறியதும், இராணுவத்தினர் புலிகளின் வானொலித் தொடர்பை ஒற்றுக்கேட்டதும் இங்கு பொருத்த மாயுள்ளது. புலிகள் இச்சம்பவத்திற்குச் சாட்சியமாகவாவது உள்ளனர் என்பது இதிலிருந்து தெரிகிறது. ஆனால் அவர்கள் பிதாவிற்கு இதைப்பற்றியேதும் சொன்னதாகவோ, இறந்தோர்களின் உறவினர்கள் செல்வதற்கு உதவிசெய்ய ஒத்துழைத்ததாகவோ வெளிவரவில்லை.

மேற்கொண்டு கிடைத்த தகவல்களின்படி ஒரு சடலம் யாழ்ப்பாணத்தில் கரையொதுங்கியதாகவும், ஏறத்தாழ 20 சடலங்கள் யாழ் கடலேரிக்கும் யாழ். குடாநாட்டிற்குமிடையே ஒதுங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. மீனவர் பகுதியிலிருந்து வந்த செய்தி நம்பத்தகுந்தது. புலிகளுக்குத்தெரிந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுடல்கள் புதைக்கப்பட்டன. ராணுவத்தினரின் சடலங்களை ICRCக்குக் கொடுக்கும் புலிகள், இவ்விடயத்தில் ICRCயைத் தொடர்புகொள்ள முயற்சியேதும் எடுக்கவில்லை. தமது சொந்தமக்கள் விமானம் நொருங்கியதில் கொல்லப்பட்டபோது புலிகள் எவ்வித அக்கறையும் காட்டாதது ஆச்சரியத்திற்குரியதே. வன்னிப்பகுதி மக்கள்கூட விமானம் வீழ்ந்து நொருங்கியது பற்றிப் பரந்துபட்டுப் பேசும்போது, புலிகளின் வானொலி இவ்விடயம் பற்றி ஒருவார்த்தை கூட கூறவில்லை.

இப்பின்னணியிலிருந்து புலிகள் தமது இறுதிப்பிரசுரத்தில் யாழ் மக்களிற்கு விடுத்தசெய்தியின் மறைபொருள் நன்கு விளங்கும். புலிகளை விளங்கிக்கொண்டவர்களிற்கு, விமானப்பயணத் தடையை மீறுபவர்கள் தண்டிக்கப்படுவது தவிர்க்கமுடியாதது என்ற புலிகளின் துண்டுப்பிரசுரத்தின் தார்ப்பரியம் நன்கு புரியும். ஆனால் விஞ்ஞானரீதியான ஆதாரங்களைத் தேடும் வெளிநாட்டவரிற்கு இது விளங்காது.

விமானம் வீழ்ந்தது தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் -

1.40 மணிக்கு விமானம் 15,000 அடி உயரம் பறப்பதற்கு பலாலியிலிருந்து விமானி அனுமதி கோரினார். 4.10.95 சண்டே டைம்ஸ் பத்திரிகைச்செய்தியின்படி விமானத்தில் அமுக்கக் குறைவு ஏற்பட்டதாக விமானி பலாலிக்குத் தெரிவித்திருக்கிறார். அதன்பின் விமானம் ரேடர்(Radar) இலிருந்து மறைந்துவிட்டது. பிதா தேவசகாயம்பிள்ளையின் BBC தமிழ்ச்சேவை பேட்டியின்படி, விமானம் தீப்பிடித்து இரணைதீவுக்கடலில் வீழ்ந்தது எமக்குத் தெரிந்ததே.

விமானப் பராமரிப்பு ஊழியர்கள் இவ்விமான அழிவிற்குக் காரணமாயிருந்திருப்பார்களென்பதை நாம் பெரும்பாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறக்கணித்துவிடலாம். ஏனெனில், அவர்கள் வெளிநாட்டவர் களென்பதுடன் கடந்த இரண்டு வருடமாக இவ் விமானசேவை பாதுகாப்பு மிகுந்ததாகவே இருந்தது. இவ் விபத்து விமானத்தின் இயந்திரகோளாறு காரணமான அமுக்கக்குறைவால் ஏற்பட்டிருப்பின், நாம் அறிந்துகொண்டுள்ளபடி இது மட்டும் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்திருக்க முடியாது. ஏனெனில், விமானமொன்று அமுக்கத்தை அரை மணிநேரம் வரை பேணி வைத்திருக்கக்கூடியது. எனவே இந்நேரகாலத்துள் விமானி விமானத்தைத் திரும்பவும் பலாலிக்குக் கொண்டுவந்து பாதுகாப்பாகச் சேர்க்கக்கூடிய அவகாசமிருந்திருக்கிறது. இதனையும் மீறிப் பிரச்சினை முற்றினால், அவர் விமானத்தைக் கடலில் அவசர தரையிறக்கம் செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளே பலமாகவுள்ளன. புலிகளின் ஏவுகணைத்தாக்குதல்களிற்குத் தப்புவதற்கு வடக்கில் உயரமாகப் பறப்பதனால், இங்கு விமான அமுக்கம் மிகவும் முக்கியமானதாகும்.

அமுக்கக்குறைவு விமானத்திற்கு வெளியிலேற்பட்ட வெடிப்பு ஒன்றினால் ஏற்பட்டிருந்தால் உள்ளேயிருக்கும் அமுக்கம் வெளியே விரைந்துபோவதற்கான சாத்தியங்களே அதிகம். இவ்வாறான நிகழ்வு விமானத்தைக் கட்டுப்படுத்தாமல் போவதற்கு ஏதுவாயிருந்திருக்கும். விமானத்திலேற்பட்ட வெடிப்பு, வெளியிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணையின் காரணமாகவோ அல்லது உள்ளிருந்து வெடித்த குண்டின் காரணமாகவோ இருக்க வேண்டும் . விமானம் தீப்பிடித்த காரணங்களில் இவ்விரண்டில் ஒன்றே அதற்கு மிகப் பொருந்தும்.

விமானத்தில் ஏறுமுன் பயணிகள் வான்படையினரால் மிகவும் கடினமான முறையில் சோதிக்கப்படுவர். பொதிகள் வெறுமையாக்கப்பட்டு ஒவ்வொரு பொருட்களும் தனித்தனியாக சோதனைக்கு உள்ளாகும். மின்சார உபகரணங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. உடல் சோதனையும் செய்யப்படும். ஒரு தற்கொலைப்படையாளர் தனது பையுடன் இந்தச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகளுக்குப் பின்னும் உள்ளே நுழைந்திருப்பின் உள்ளே குண்டு வெடிக்கும்போது விமானி அதனை குறிப்பிடாமல் இருந்திருக்கமாட்டார். அமுக்கக் குறைவு பற்றி அவர் தொடர்பு சாதனத்தின் மூலம் தெரிவித்திருக்கவும் மாட்டார். அத்துடன் அவரது தொடர்புச்செய்தியின் முழுச்சாரமும் வெளிப்படுத்தப்பட வில்லை. இதன் காரணம், விமான கட்டுப்பாட்டு அதிகாரி விமானி செய்தி தெரிவிக்கும் சமயம் அங்கிருக்கவில்லை என்ற உள் செய்தி எமக்கு தெரியவந்துள்ளது. ஒலிப்பதிவு நாடாவில் பதிவானது மட்டுமே இறுதியில் கேட்கபட்டது. இந்த அசட்டைத் தனத்தை வெளியிட தயங்குவதும் அரசின் மௌனத்திற்கு காரணமாயிருக்கலாம்.

உள் ஊர் மக்களின் வாக்கு மூலம் -

இந்த அறிக்கையை நாம் முடிக்கும் தருணத்தில் இப் பேரிடர் சம்பந்தமான வேறுமொரு செய்தி எமக்குக் கிடைத்தது. இச் செய்தி ஆரம்பத்தில் மற்றைய வதந்திகளுடன் சேர்ந்து வந்தது. ஆனாலும், அர்ப்பணிப்பு நிறைந்த சில செயற்பாட்டாளர்களின் உழைப்பின் மூலம் இச்செய்தி பரிசீலித்துப்பார்க்கப்பட்டதுடன் இச் செய்தி வந்த பின்னணிகளும் சோதித்துப் பார்க்கப்பட்டது. இதன்படி விமானம் வீழ்ந்ததற்கு இரு நாட்களிற்கு முன்னர் புலி உறுப்பினர்கள் இரணைதீவில் நடமாடியிருக்கின்றனர். அத்துடன் பெரும் தீவிலிருக்கும் தேவாலயமருகில் ஒரு மேடையொன்றையும் கட்டியிருக்கின்றனர். இரணை தீவு நாச்சிக்குடாவின் மேற்குக் கடலில் 7 மைல் தூரத்திலுள்ளது. வடக்குப்பகுதித் தீவு பெருந்தீவு. கிழக்குப் பகுதித் தீவு சிறுந்தீவு. மீனவர்கள் அங்கு வாடிகட்டுவது வழக்கம். அங்கு இரண்டு தேவாலயங்கள் உள்ளன. பெருந்தீவில் சம்பியோ மயுரோர் தேவாலயமும் சிறு தீவில் சாந்த செபஸ்தியன் தேவாலயமும் இருந்தன. நாச்சிக்குடாவிலுள்ள கடல்புலிகளின் தளத்திலிருந்து புலிகள் தேவையேற்படின் அங்கு செல்வர். முக்கியமாகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு தீவிற்கு. ஏனெனில் அதுவே நாச்சிக்குடாவிற்கு அருகிலுள்ளது. சிறு தீவில் மிகச்சொற்ப குடும்பங்களே நிரந்தரமாக வசிக்கின்றனர். ஆனால், பெருந்தீவில் 50 குடும்பங்கள் அளவில் அரச குடியிருப்புக்களில் இருக்கின்றனர். மீனவர்கள் அங்கும் வாடிகட்டவருவர். செப்டெம்பர் 29ம் திகதி மாலை மீனவர்கள் பெருந்தீவுக்கருகிலுள்ள கடலில் நின்றிருக்கிறார்கள். விமானம் தீப்பிடித்து 1 மைல் தூரமளவில் வீழ்ந்ததை அவர்கள் கண்டனர். அவர்கள் நின்ற இடத்திலிருந்து விமானம் வீழ்ந்த கடல் 12 - 15 அடி ஆழமென அவர்கள் அனுமானித்தனர். விமானம் எரிந்து வீழும் போது பேப்பர் அல்லது ஈயம் போன்ற பொருட்கள் விமானத்திலிருந்து வெளிவந்ததை அவர்கள் பார்த்திருக்கின்றனர். குறுகிய நேரத்தில் புலிகளின் இரண்டு விசைப்படகுகள் விமானம் விழுந்த இடத்தை நோக்கி விரைந்ததைக் கண்டு அவர்கள் மேலும் ஆச்சரியமடைந்தனர். இச்சம்பவத்தைக் கண்டு பயந்த மீனவர்கள் பெருந்தீவுக் கரைக்குச் சென்று அங்கிருந்து மேலும் நடப்பவைகளை அவதானித்தனர். புலிகள் அவர்களை நெருங்கி அவ்விடத்தை விட்டு நகருமாறு உத்தரவிட்டனர். அங்குநின்ற புலிகள் பெருமிதக் களிப்புடனும் உரத்துக்கதைத்துக்கொண்டும் நாச்சிக்குடாவை நோக்கிச்சென்றனர். பெருந்தீவு மீனவர்கள் இதனை பீதியுடன் மௌனமாக கேட்டுக்கொண்டிருந்தனர். இதை புலிகளின் தொடர்பு சாதனத்தை ஒற்றுக்கேட்ட ராணுவமும் உறுதிப்படுத்தியிருக்கிறது.

புலிகளால் விமானம் வீழ்த்தப்பட்டதை அங்கிருந்த மீனவர்கள் நன்குணர்ந்து கொண்டனர். தேவாலயத்திற்கு அருகே கட்டப்பட்ட உயர்மேடையின் தார்ப்பரியம் இதற்கென அவர்கள் ஊகித்தனர். புலிகள் இச்சம்பவம் பற்றி ஒரு வார்த்தை கூட கூறாததும், பலியானவர்களின் உறவினர்களுக்கு எவ்வுதவி கூடச் செய்யாததும் இங்கு அவதானிக்கப்படவேண்டியது. வங்காலையைச் சேர்ந்த இருமாணவிகள் விமானத்தில் சென்ற காரணத்தினால், இச்சம்பவம்பற்றி மேலும் அறிய மக்கள் துடித்தனர். பலியானவர் ஒருவரின் நெருங்கிய உறவினர் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் தொடர்பாளர்களைத் தொடர்புகொண்டு நடந்த சம்பவம்பற்றி விசாரிக்கையில் பின்வருமாறு கதறினார். "இந்தச் சாபம் பிடித்தவங்கள்!......ஒரு 17 வயதுப் பையன்தான் விமானத்தைச் சுட்டு விழுத்தியவன்." நாச்சிக்குடா கடற் புலி தளத்திற்குப் பொறுப்பான அருள் என்ற புலிப்பொறுப்பாளரே விமானத்தைச் சுட்டுவிழுத்தினார் என அவ்வட்டார மக்கள் கூறினர்.

புலிகள் ஏன் தேவாலயத்திற்கு அருகே தமது இடத்தைத் தேர்ந்தெடுத்தனர் என்பதற்கு எமக்குத் தகவல் தந்தவர்களின் பதில், ஓர் உயர் மேடையை வெட்டுவெளியில் கட்டுவது வேவு விமானங்களின் பார்வைக்குப் படும் சாத்தியக்கூறுகள் அதிகம். தேவாலயம் இதற்கான மறைப்பைக் கொடுக்கும். ஆனால் இந்தத் தகவலுக்கு எதிராகப் பின்வரும் விடயம் கூறப்பட்டது. இது மேம்போக்காக பார்ப்பின் சரி போன்றே தோன்றும். புலிகளின் தோளிலிருந்து சுடப்படும் ஏவுகணைகள் 15,000 அடி உயரத்தில் பறக்கும் விமானத்தை அணுகும் சக்தியற்றன. புலிகள் இவ்வாறான ஏவுகணைகளை முன்னர் படகுகளிலிருந்து செலுத்தியிருக்கின்றனர். இதனை முன்னைய விமானப்படைத்தளபதியொருவரும் ஒத்துக்கொண்டுள்ளார். ஆனால் பாதுகாப்பு அமைச்சும் விமானக்கம்பனியும் சக்திவாய்ந்த ஏவுகணையைச் செலுத்த ஓர் வலுக்கொண்ட மேடை அவசியம் என்ற விடயத்தை கவனிக்கத்தவறிவிட்டனர்.

இன்றைய அரசுடனான 1995ம் ஆண்டு பேச்சுவார்த்தை முறிவடைய சற்றுமுன், புலிகளின் கண்மூடித்தனமான நடத்தைகளும் அவர்களின் நியாயமற்ற நிபந்தனைகளும் யாவரையும் திகைக்கவைத்தன. சமாதானக்குழுக்கள் யாவும் புலிகளின் நிலைக்கான காரணகாரியங்களை கண்டுபிடித்தன. ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்த பல நுட்பமான அவதானிகளுக்கு இது ஒரு சில்லறை விடயம். அவர்களின் பார்வையின் படி சமாதான காலகட்டத்தில் புலிகள் தோளிலிருந்து ஏவும் ஏவுகணைகளை வாங்கியிருக்கின்றனர். இதனைப் பரீட்சித்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதற்கு புலிகள் ஆவலாயிருந்தனர். சமாதானப் பேச்சுவார்த்தை முறிவுக்கு இதுவே காரணம். இதற்கு யுத்தநிறுத்தம் முறிந்து 12 நாட்களிற்கிடையில் வான்படையினரின் இரு அவ்ரோ விமானங்கள் சுடப்பட்டு 100 பேர் இறந்த சம்பவம் சான்று. இரண்டாவது விமானம் சுடப்பட்டதற்குக் காரணம் முதலாவது விமானம் ஏவுகணைத்தாக்குதலால் வீழ்த்தப்பட்டதை அரசு அசட்டை செய்ததே. இந்தத் தளத்தில் வைத்து ஆய்வு செய்கையில், கடந்த இரண்டு வருடமாக விமானச் சேவை நடந்துகொண்டிருக்க, கடந்த ஆகஸ்ட் மாதமளவிலேயே புலிகள் விமானசேவை பாதுகாப்புப்படையினரிற்கு உதவுகின்றதென குற்றச்சாட்டு எழுப்பியதன் தார்ப்பரியம் விளங்கும்.

விமானம் வீழ்ந்தது பற்றிய மீனவர்களின் தகவலில் புலிகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றி தேவசகாயம்பிள்ளை மௌனம் சாதித்ததன் உட்பொருளும் எமக்கு விளக்குகிறது. வங்காலையைச் சேர்ந்த எவரையும் விட பிதாவிற்கு இச்சம்பவம் பற்றி அதிகம் தெரிந்திருக்கவேண்டிய சந்தர்ப்பம் அதிகம். பல விடயங்களில் பிதா மௌனம் சாதித்தபோதும் விமானம் எரிந்து விழுந்தது பற்றி தெளிவாக கூறியிருக்கிறார். ஆனால் 2.10.98 உதயன் செய்தி தேவசகாயம்பிள்ளை விமானம் எரிந்ததெனக்கூறிய செய்தியை வெளியிடாததன் பின்னனி வட-கிழக்கில் பழகிப்போன தப்பிவாழும் போக்கின் ஓர் வெளிப்பாடு. இது உதயன் தன்னைத்தானே தணிக்கைசெய்துகொண்ட அல்லது கச்சேரி உத்தியோகத்தர்கள் தங்களைப்பாதுகாக்க மறைத்துக்கொண்ட செயலா ?

தூரத்தை குறைப்பதை கருத்தில் கொண்டு, தெற்கு நோக்கி பறக்கும் ஓர் விமானம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கு மேலாகவோ, அருகாமையோ முதலில் செல்வதென்றால் இரணை தீவே முதலாக வரும். புலிகள் திருக்கேதீஸ்வரம் அல்லது தென்பகுதி வவுனியா றோட் வில்பத்து வரை விமானத்தை வீழ்த்தக்கூடிய சான்றுகள் இருப்பினும் இரணை தீவைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுப்பதற்கான பின்னணி ஒன்று இருக்கின்றது. தென்பக்கமான வவுனியா றோட் இராணுவத்தினரின் முழுக்கட்டுப்பாட்டில் இல்லாதபோதும் புலிகளுக்கும் அப்பிரதேசங்கள் பலவீனமானவையே. இராணுவம் எப்போதும் அங்கு நுழைய வாய்ப்புகள் அதிகம். ஆனால் வவுனியா வீதியின் வடக்குப் பிராந்தியத்தில் புலிகளின் ஆதிக்கம் பலம் வாய்ந்தது. அதுவும் ஒரு பொருத்தமான இடமாக இருந்திருக்கும். இரணைதீவு புலிகளுக்கு ஒரு பொருத்தமான இடமென்பதற்கான வலுவான சாத்தியங்களாவன, விமானம் வீழ்ந்தது புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடலுக்குள். இரணைதீவு ஒப்பீட்டளவில் ஜனசஞ்சாரமற்ற ஒதுக்குப்புறமான பிரதேசம். இது புலிகளின் இரகசிய செயற்பாட்டை உறுதி செய்ய ஏதுவாயிருந்தது மட்டுமல்ல விமானம் வீழ்ந்தது பற்றி உடனடித் தகவல்கள் ஏதும் வெளியுலகிற்குக் கிடைக்க வாய்ப்புகளையும் குறைக்கும். இதனால் செய்தித்தாபனங்களின் உடனடிப் பரபரப்பும் அவாவும் குறைவதற்கான சூழல் அதிகம்.

மேலும், தெற்காக விமானம் வீழ்த்தப்பட்டிருப்பின் விமானம் பெருநிலப்பரப்பிலேயே வீழ்ந்திருக்கும். பொதுமக்கள் அதனைப் பார்ப்பதற்கும் செய்தி விரைந்து பரவுவதற்கும் இது துணை புரிந்திருக்கும். அப்பகுதி மக்கள் புலிகள்மேல் ஆத்திரத்தையும் காட்டியிருப்பர். இராணுவம் வெளிநாட்டு செய்தி நிறுவனங்கள் சகிதம் சென்று தடயங்கள் புகைப்படங்களை எடுப்பதன்மூலம் நிறைந்த சாட்சியங்கள் கிடைக்கக்கூடிய சான்றுகள் இருந்திருக்கும்.

*புலிகளின் சார்பாக இதன் பின் விடப்பட்ட அறிக்கைகள் எதிலும் விமானம் வீழ்ந்தது சம்பந்தமான பச்சாதாபமோ அல்லது தாம் தவறு விட்டதாகவோ வெளிவரவுமில்லை. பாதுகாப்பு படையினரை ஏற்றி சென்ற விமானம் என புலிகள் தவறாக எண்ணவும் இங்கு வாய்ப்பு இல்லை. காரணம், பாதுகாப்பு அமைச்சின் ஒப்பந்தப்படி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இராணுவத்தினருடன் பறக்கும் விமானம் ஒருபோதும் குறுகியவழியை எடுத்திராது. நெடுந்தூரமெனினும் பாதுகாப்பான வழியையே எடுத்திருக்கும். இது புலிகள் அறியாததல்ல.* *

ஆனாலும், தமிழ் சமுகத்தின் பிரமுகர்களையும், ஸ்தாபனங்களையும், சில அரசியல் கட்சிகளையும் இவ்வாறான குழப்பங்களை உண்டாக்கி தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த புலிகள் நம்பியுள்ளனர். சிறிலங்கா அரசு, நவாலி தேவாலயத்தில் குண்டு வீசி 120 அகதிகளைக்கொன்றபோது கிறிஸ்தவ மதஸ்தாபனங்களும் செஞ்சிலுவைச்சங்கமும் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு இந்த அராஜகத்தை உலகிற்குக் கொண்டு வந்தது மிகச் சரியான விடயமே. அரசு யாழ்ப்பாணத்திற்குப் பத்திரிகையாளர்கள் போவதற்குத் தடைவிதித்ததுடன் நவாலி கொலைகளுக்காக வருத்தம்கூட தெரிவிக்கவில்லை. இந்திய பத்திரிகையாளரொருவர் பொய்யான அடையாளஅட்டையுடன் யாழ் சென்று விடயங்களைத் தெரிவித்தார். அரசு மறைக்கமுயன்றும் அனைத்தும் வெளிவந்தது.

இதே போன்று விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவம்பற்றியும் கிறீஸ்தவ மத ஸ்தாபனம் அனைத்தையும் அறிந்திருந்தது. ஆனால் மௌனம் சாதித்தது. இவ்விடயத்தில் செஞ்சிலுவைச்சங்கத்தினர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சகலவிடயங்களையும் அறிய புலிகள் இடங்கொடுக்கவுமில்லை. பீதியைக்கிளப்புவதன் மூலமும், குழப்பத்தையும் மௌனத்தையும் உண்டாக்குவதன் மூலமும் பிரச்சினைகளைத்திசைதிருப்புவதில் புலிகள் சாமர்த்தியசாலிகளே.

---

* இவ்வறிக்கை வெளிவந்து பரவலாக விவாதங்களை தோற்றுவித்தபின், லண்டனில் வெளியாகும் புலிகள் சார்பான Hot Spring ஒக்ரோபர் இதழ், அதன் ஆசிரியர் தலையங்கத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களுக்கு நேர்ந்த இந்த அவலமான சம்பவத்தை பின்வருமாறு கோமாளித்தனமாக நியாயப்படுத்த முனைந்துள்ளது.

......... *கிளிநொச்சி சண்டையிலிருந்து இரு நாட்களின் பின் அரசாங்கம் கிளிநொச்சிவிடாக யாழ்ப்பாணத்தை பாதையைத் திறக்கும் நம்பிக்கையை முற்றாகக் கைவிடவேண்டியிருந்தது. இந்நிலையில் ஒரு குழப்பமான சம்பவம் நேர்ந்தது. லயன் எயார் தனியார் விமான சேவைக்குச் சொந்தமான ரஷ்யா தயாரிப்பான அன்ரனோவ் விமானம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கிச்செல்லும்போது காணாமற்போய்விட்டது. தனியார் விமானசேவைகளான மொனராவும் லயன் எயாரும் தினமும் நான்கு அல்லது ஐந்து சேவைகளை நடத்தின. அத்துடன் லயன் எயார் அரச படைகளையும் ஏற்றி இறக்கி வந்தது. சிலவேளைகளில் பொதுமக்களைக் கொண்ட விமானத்தை முன் அனுப்பிவிட்டு இதற்குப் பின்னால் இராணுவத்தினரைக் கொண்ட அதே போன்ற இரு விமானங்களை அனுப்பிவந்தனர். ஏனென்றால் புலிகள் தாக்கமுயன்றால் நிச்சயமாக தமிழ்ப் பொதுமக்கள் செல்லும் விமானமே குறிவைக்கப்படும் என்பதால். அன்று விழுந்த விமானம் கிட்டத்தட்ட முழுவதும் தமிழ்மக்களைக் கொண்டு சென்ற விமானமாகவே இருந்தது. அன்றிலிருந்து இரு தனியார் விமானங்களும் தமது சேவைகளை இடைநிறுத்தியதோடு கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமான ஆகாயமார்க்கப் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டது. இதுதான் வடக்கிற்கும் தெற்கிற்கும் இருந்த ஒரேயொரு தொடர்பு. இந்த முரண்பாடான நிலமையை சிந்தித்துப் பாருங்கள் - வடக்கு நடைமுறையில் தெற்கிலிருந்து பிரிகிறது !* ...........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் மௌனம் எதற்காக ?

சர்வதேசரீதியில் கடந்த சில தசாப்தங்களில் பயணிகள் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்ட நிகழ்வுகள் மிகக்குறைவே. கொரிய விமானம் முன்னைய சோவியத் அரசால் சுட்டுவீழ்த்தப்பட்டதும் ஈரானிய விமானம் அமெரிக்கப்படையினரால் சுட்டுவீழ்த்தப்பட்டதும் 80களில் நடந்த சம்பவங்கள். விமானங்கள் சுடப்பட்டதன் பின்னணியில் வெவ்வேறு நாடுகள் சம்பந்தப்பட்டிருந்ததோடு, தவறான தகவல்கள், தவறான இலக்கு என அதற்குச் சாக்குப் போக்குகள் சொல்லப்பட்டன. பயாபராவிற்குச் செஞ்சிலுவைச்சங்க விமானம் உதவிப் பொருட்களுடன் சென்றபோது நைஜீரியஅரசு அதனை சுட்டு வீழ்த்தியது 1969ல் நிகழ்ந்தது. பயாவராவின் தனிநாட்டுக்கோரிக்கைக்கு எதிராக நைஜீரிய அரசு மக்களைப் பட்டினிபோடும் தந்திரந்தைக் கையாண்டதுடன் செஞ்சிலுவைச் சங்கத்தை எவ்வித உதவியும் செய்யவேண்டாமெனவும் எச்சரித்தது. அதிஸ்டவசமாக சர்வதேச நெருக்குதல்களாலும், தென்பகுதி மக்களின் நல்எண்ணத்தாலும் தமிழ்மக்களைப் பட்டினி போடும் தந்திரத்தை இலங்கை அரசு மேற்கொள்ள முடியவில்லை.

எப்படிப் பார்ப்பினும் லயன் எயார் சம்பவம் ஓர் தனித்துவ நிகழ்வே. தனிநாடு கோரும் ஓர் இயக்கம் தமது சொந்த மக்கள் சென்ற விமானத்தைத் திட்டமிட்டுச்சுட்டு வீழ்த்திய முதல் வரலாறு இதுவே. தம்மை காக்க எவ்வித வசதியுமற்ற நிர்க்கதியில் செல்லும் பயணிகள் விமானத்தைச் சுட்டுவீழ்த்தியது ஒரு கேவலமான மனித தன்மையற்ற ஈனச் செயலாகும்.

இவ்விமானத்தில் பயணம்செய்த சில பயணிகள் : -

1. தனது கணவரின் 70 வது பிறந்ததினத்தைக்கொண்டாட கொழும்பு சென்ற திருமதி தமயநாயகி சுப்பிரமணியம்.
2. செல்வி.வனஜா, செல்வி.செல்வராணி என்ற இரு யாழ் பல்கலைக்கழக மாணவிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பருத்தித்துறையைச்சேர்ந்த திருமதி.புஸ்பம் செல்வராஜா என்ற 60 வயது விதவை. கனடாவில் தனது மகனுடன் வாழ்வதை அர்த்தமில்லையெனக் கருதி யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்தவர்.
4. திரு.சசி கிருஸ்ணமூர்த்தி கொழும்பில் பனம்பொருள் அபிவிருத்தி சங்கத்திற்கு செயலாளராகப்பணிபுரிந்தது மட்டுமல்ல, பன்முக ஆற்றல்மிக்க ஒரு கலை இலக்கிய வாதியும் கூட. இருதய நோயாளரான தனது மனைவியும் இரு பிள்ளைகளும் யாழ்ப்பாணத்தில் இருந்ததால் தனது இருப்பு யாழ்ப்பாணத்தில் அவசியமென இடமாற்றம்கோரி அது நிறைவேறாவிடின் ராஜினாமாசெய்வதற்கும் தயாராக விருந்தவர். தனது பல்கலைக்கழகநாட்களில் பல்வேறு மனித உரிமைப்போராட்டங்களில் பங்கு கொண்டவர். யாழ்ப் பாணத்தில் புலிகளின் மோசமான அடக்குமுறை காலகட்டங் களில்கூட தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல் கனது அதிருப்திகளைத் தனிப்பட்ட முறையில் தெரிவித்துக் கொண்டேயிருந்தார். 1996ல் இராணுவம் அவரது மருமகனைக் கைது செய்து அவர் காணாமல்போனவர் பட்டியலில் சேர்க்கப்பட்டபின் மனம் தளர்ந்திருந்தார்.
5. இளங்கோ என்னும் மருத்துவரும், பரமசிவம் என்ற ஆயுர்வேத மருத்துவரும்கூட இதிலடங்குவர்.

இதில் பலியான மற்றவர்களின் பின்னணியும் இதேபோன்றது என்பதில் ஐயமில்லை. பயணம் செய்த அனைவரும் எவ்வித அரசியல்நோக்கமுமின்றியே சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள், போக்குவரத்து எங்களுக்கு அத்தியாவசியம், எங்களிடம் உங்கள் விளையாட்டைக்காட்ட வேண்டாம் என்பதே பாதிக்கப்பட்ட தமிழ்மக்களது வேண்டுகோள். இந்த விமானப் பயணத்தில் பலியானவர்களில் ஒரு குழந்தையும் 19 பெண்களும் அடங்குவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளின் ஓகஸ்ட் 1998 தேதிய " HOT SPRING " பத்திரிகையைத் தட்டிப்பார்த்தால் மௌனம் ஏன் அவசியம் என்பதன் அர்த்தம் புரியும். "இலங்கை அரசின் மிதிவெடியால் பாதிக்கப்பட்ட தமிழ்ச்சிறுவர்கள்" என்ற தலைப்பிட்ட அட்டையைத் தாங்கி கண்ணிவெடியால் பாதிக்கப்பட்ட 3 சிறுவர்களின் புகைப்படத்துடன் " HOT SPRING " வெளியாகியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலோர் புலிகளின் மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களே என்பது நன்கு தெரிந்ததே. யாழ் மேற்றிராணியார்(பேராயர்) ஜெயப்பூர் செயற்கைக்கால்தொழிற்சாலைக்கு தனது 10வது ஆண்டு நிறைவு விழா செய்தியில் 'ஜொனி'* மிதிவெடியாலேயே பாதிக்கப்பட்டிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார். HOT SPRING பத்திரிகையின் உட்பக்கத்தில் அதே தீவிரத்துடன் பெண்கள் அபிவிருத்தி தொடர்பு நிலையம் என்ற அரச சார்பற்ற நிறுவனம்(NGO) ஒன்றின் அறிக்கையிலிருந்து புகைப்படம் ஒன்றையும் பிரசுரித்து இருந்தது. இப்படத்தின் தலைப்பு இலங்கை ராணுவத்தின் ஆக்கிரமிப்பால் அல்லலுறும் தமிழ் குழந்தைகளும் பெண்களும். அது மட்டுமல்ல பாலியல் வன்முறை என்ற தலைப்பும் அத்துடன் சேர்க்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பிரச்சாரம் செய்யும் புலிகளும் அதன் ஆதரவாளர்களும் 19பெண்களையும் ஒரு குழந்தையையும், பயணிகள் விமானத்தைச் சுட்டு விழுத்தியதன் மூலம் கொன்றோம் என்பதை பகிரங்கப்படுத்தும் திராணியுள்ளவர்களா ? மல்லிகா ராஜரட்ணம், சரோஜினி யோகேஸ்வரன் போன்ற சமீபத்திய கொலைகளுடன் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிரான புலிகளின் குற்றச் செயல்களுக்கு ஒரு நீண்ட கால வரலாறு உண்டு. எனவே மௌனம் மகத்துவமானது.

---

* 'ஜொனி' புலிகள் தயாரிக்கும் மிதிவெடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயன் எயார் விமானம் புலிகளினால் சுடப்பட்டது என்பதைப் பாதுகாப்பு அமைச்சு ஆரம்பத்திலிருந்தே நன்கு உணர்ந்திருந்தது. ஆனால் இக்குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர்களிற்கு எந்த ஒரு ஆறுதல்வார்த்தையையும் கூட அரசின் உயர் அதிகாரிகள் எவரும் தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்ல, விழுந்த விமானத் தடயங்கள் பற்றிய ஆராய்ச்சியோ, அச்சம்பவத்தில் காணாமல் போனவர்களைக் கண்டு பிடிப்பதற்கோ அரசு தீவிரமான முயற்சி எதனையும் செய்யவில்லை. துாரதிருஸ்டவசமான இந்தச் சம்பவத்தில் இறந்த 48 பயணிகளும் தமிழர் என DAILY NEWS செய்தி வெளியிட்டது. இவ்வாறான தலையங்கங்களை இந்த நாட்டு மக்கள் பார்த்துப் பழகிப்போனவர்கள். ஆனால் வெளிநாட்டுப் பெண்ணொருவர் இதைப்பார்த்து மனம் தளர்ந்து போனார். அப்பெண்ணின் பார்வையில் இன்னொரு நாட்டைச்சேர்ந்த 48 பேர் இறந்தனர், இது எங்களுடைய பிரச்சினை அல்ல என்றதோர் அர்த்தத்தையே இத்தலையங்கம் கொடுத்தது என்றார்.

புலிகள் விமானசேவையினரிற்குக் கொடுத்த எச்சரிக்கைகள் அரசால் மறைக்கப்பட்டதென்றே தெரிகிறது. பாதுகாப்புப் படையினரை விமானத்தில் ஏற்றவேண்டாமென்று புலிகள் எச்சரித்து இருந்தனர் என்பதை இவ்விடயம் தெரிந்தவர்கள் கூறினார்கள். 15.9.98 க்குப் பின்னர் பறக்கும் விமானங்கள் சுடப்படும் என்பதும் மறுஅறிவித்தல் வரும்வரை விமானசேவை ரத்துச்செய்யப்படவேண்டும் என்பதும் புலிகளின் செய்தியில் அடங்கியிருந்தது. 18.9.98 தேதிய உதயன் பத்திரிகை வெளியிட்ட EPRLF அறிக்கை பாதுகாப்புப் படையினரை விமானசேவையினர் ஏற்றுவது பற்றிய புலிகளின் ஆட்சேபனையைக் குறிப்பிட்டிருந்தது. கொழும்பில் வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகைகளில் இது பற்றி எவ்வித தகவலும் குறிப்பிடப்படவில்லை. 26.9.98 WEEKEND EXPRESS மட்டுமே இச்செய்தியை வெளியிட்டிருந்தது. மற்றைய பத்திரிகைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகள் விமானசேவையை ஒட்டுமொத்தமாக ரத்துச் செய்யுமாறு எச்சரித்திருந்தது மட்டுமே வெளியிடப்பட்டிருந்தது.

பயணிகள் விமானத்தில் பாதுகாப்புப் படையினரைக்கொண்டு செல்வது பற்றிய ஆட்சேபனை போர்க்கால சூழலைக்கருத்தில் கொள்ளும்போது பொருத்தமானதே.

இவ்விடயத்தை எச்சரிக்கையுடன் அணுகாமல் அரசும் விமானசேவையினரும் நிலமை கட்டுப்பாட்டிலுள்ளது எனும் பிரமையை மக்களுக்குக் கொடுத்தனர். விமானசேவையின் யாழ் கிளை முகாமையாளர்கள் ராஜினாமாச் செய்தது தனிப்பட்ட காரணங்களுக்காகவே என்றே பரவலாகக் குறிப்பிடப்பட்டது. ஆங்கிலப் பத்திரிகையை மட்டும் படிப்பவர்கள் விமானசேவையை நிறுத்தவேண்டுமென்பதற்கு எவ்வித காரணத்தையும் கண்டு பிடித்திருக்கமாட்டார்கள். இச்செய்தி தொடர்பாக தகவல், ஆய்வு, அக்கறை என்பன செய்தி ஸ்தாபனங்களிற்கு இருக்கவில்லை.

புலிகளின் எச்சரிக்கை பற்றிய உண்மையை அறிய செஞ் சிலுவைச் சங்கம் கோரப்பட்டது எனும் செய்தியை 26.7.98 WEEKEND EXPRESS வெளியிட்டிருந்தது. மறுநாளைய உச்சக்கட்ட யுத்தத்தின் காரணத்தால் செஞ்சிலுவைச்சங்கம் இக்கோரிக்கையை நிவர்த்திசெய்ய முடிந்திருக்கும் என்பது ஐயமே. லயன் எயார் கொழும்பு முகாமையாளர் இவ் எச்சரிக்கை உண்மையானதா என்பதை தாங்கள் ஆராய்வதாகவும் இதில் போட்டி விமானசேவையினரும் சம்பந்தப் பட்டிருக்கலாமென தாங்கள் சந்தேகிப்பதாகவும் கூறினார். பாதுகாப்புப் படையினரை ஏற்றுவதற்கு விமானம் பயன் படுத்தப்படுவது தொடர்பாக எச்சரிக்கை வந்திருந்தால் அது புலிகளின் அதிகாரபூர்வமான கடிதத் தலைப்புடன் வந்ததா என்பதை ஆராயவேண்டிய அவசியமே தேவையில்லை. புலிகள் யாழ்ப்பாண தாக்குதல்கள் தொடங்குவதற்கு ஆயுதங்களை வாங்குகிறார்கள் என்பது பொதுவாக அறியப்பட்ட விடயம். நவீன ஏவுகணைகளை புலிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவதற்கு இன்றைய வியாபார உலகில் பெரும் தடையேதும் இருக்கப்போவதில்லை.

விமானசேவையை நிறுத்தி நிலமையை மீளாய்வு செய்வதே விமானசேவையினர் செய்திருக்கவேண்டிய ஒன்று. விமான சேவையினரிற்குப் புலிகளைத் தொடர்பு செய்துகொள்ளக்கூடிய வசதி உள்ளதென்பதும் தெரிந்ததே. கடற்கரையோரமாகச் செல்லும் விமானப்பாதை ஆபத்தானதென PLOTE இராணுவத் தளபதி, தான் பாதுகாப்பு அமைச்சுக்கு எச்சரிக்கை செய்ததாகக் கூடக் கூறினார். இச் செய்தி மறுக்கப்படவுமில்லை. தெற்கு நோக்கிச்செல்லும் விமானம் 15,000 அடிக்கு உயர்ந்தபின் இரணைதீவு திருக்கேதீஸ்வரத்தைத் தாண்டி முள்ளிக்குளம் - வில்பத்து ஊடாக புத்தளம் வழி சென்று அதன்பின் தனது உயரத்தைக் குறைக்குமெனப் பலர் தெரிவித்தனர். தோளிலிருந்து சுடப்படும் ஏவுகணைகளைத் தவிர்ப்பதற்காக விமானம் அந்த உயரத்தில் வடக்கில் பறப்பது அத்தியாவசியமானது எனக் கருதப்பட்டது. நவீனரக ஏவுகணைகளைப் புலிகள் பயன்படுத்துவார்களென்பது எச்சரிக்கைகளுக்குப் பிறகும் கணக்கிலெடுக்கப்படவில்லை.

பாதுகாப்பு அமைச்சு அங்கீகரிக்காத பாதையிலேயே பயணிகள் விமானம்சென்றது நிலமையை இன்னும்மோசமாக்கியது. அங்கீகரிக்கப்பட்ட பாதையின்படி விமானம் கடலுக்கு இன்னும் மேற்காகப்பறந்திருக்கவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட பாதை வழியாக லயன் எயார் விமானத்தில் சென்ற பயணிகள் இரணைதீவிலிருந்து ஏறக்குறைய 10 மைலுக்கப்பால் விமானம் பறந்ததாகத் தெரிவித்தனர். அங்கீகரிக்கப்படாத பாதை 10நிமிட விமான சேவை நேரத்தையும் அதன் செலவையும் மிச்சப்படுத்தி யிருக்கும். இதனைத் தடுத்திருந்தால் இப்பேரழிவை நிறுத்தி யிருக்கலாம். பலாலி விமானக் கட்டுப்பாட்டு நிலையம் விமானம் தவறான பாதையின் ஊடாகச்செல்வதென்பதை ராடர்மூலம் அவதானித்திருக்கும் என்பதும் அது பாதுகாப்பு அமைச்சுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்திருக்குமென்பதும் சந்தேகமற்ற விடயமே. இதுபற்றி PLOTE ராணுவ தளபதி இச்சம்பவத்திற்கு 4நாட்களுக்கு முன்னர் எச்சரித்திருந்தபோதிலும் பாதுகாப்பு அமைச்சு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்பது அவதானிக்கத் தக்கது. பாதுகாப்பு அமைச்சுக்கும் தனியார் விமானசேவையினரிற்கு மிடையில் உள்ள உறவு மிகவும் நெருக்கமானது. விமானசேவையினர் தமது இலாபம் கருதி பாதுகாப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் செயல்களை பாதுகாப்பு அமைச்சு கண்டும் காணாமல் இருப்பது இக்காரணத்தால்கானா ?

அரசும் விமானசேவையினரும் பொதுமக்களையும் விமான பணியாட்களையும் இந்த ஆபத்தான சூழலிற்குத்தள்ளி விட்டதற்குப் பதில் சொல்லத்தான் வேண்டும். பாதுகாப்புப் படையினரை விமானத்தில் ஏற்றவேண்டாமென்ற புலிகளின் கட்டாயத்திற்கு முகம் கொடுக்க மறுத்ததன்காரணந்தான் இதுவோ ? உள்ளூர்ச்சூழலை உணராத வெளிநாட்டு விமானப் பணியாளர்களுக்கு புலிகளின் எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டதா அல்லது அவர்களுக்கும் இச்செய்தி இருட்டடிப்புச் செய்யப் பட்டதா? சர்வதேச நியதிகளின்படி போர்க்கால சூழலில் இராணுவ சிவில் நடவடிக்கைகள் தெளிவாகப்பிரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு அமையாது அரசும், விமான சேவையினரும் நடந்து கொண்டதுவே அரசின் மௌனத்திற்குக் காரணம்.

அமைச்சரவையின் பத்திரிகையாளர் சந்திப்பொன்றின்போது பத்திரிகையாளர் ஒருவர் விமான பாதைபற்றிய கேள்வியொன்றை எழுப்பியபோது, பாதுகாப்பு அமைச்சு எவ்வித விமானப்பாதை யொன்றையும் சிபார்சு செய்யவில்லையென பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி தெரிவித்தார். பாதுகாப்பான ஒரு பாதையைத் தெரிந்தெடுப்பதை விமானசேவையினரிடம் விட்டுவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். யுத்தகாலத்தின் போது தமிழ்மக்களின் பாதுகாப்பு பற்றிய அக்கறை தங்களுக் கில்லையென்பதை ஒப்புக்கொள்வது போன்றதே இக்கூற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாராம்சம். ஒரு தனியார் நிறுவனத்தின் லாபநோக்கத்திற்கு மக்களை பணயம் வைப்பதை பாராமுகமாக விடுவதோ அல்லது இவ்வாறான செயல்களை கண்காணிக்கும் பணியை தனது பொறுப்பென கருதாமலோ நடக்குமொரு அரசு தன்னை மக்களது அரசென கூறிக்கொள்வது நகைக்கத்தக்கதே. ஒட்டுமொத்தமாக இது ஒரு பொறுப்பற்ற செயலே.

ஆகஸ்ட் 1996ல் எவ்வித காரணமுமின்றி லயன் எயார் விமானத்தினர் விமான படையினரிடமிருந்து பயண விமானங்களைப் பொறுப்பெடுத்தபோது கட்டணங்கள் இரட்டிப்பாக்கப்பட்டன. விமானசேவை இலாபகரமானதென்பது உண்மையே. 250 மைல்கள் தூரமுள்ள கொழும்புக்கு 5000-6000 ரூபா வரை விமானசேவையினர் அறவிடுகின்றனர். 2000 மைல்களுக்கப்பாலுள்ள சிங்கப்பூருக்கு இத்தொகையில் 4 மடங்கைச் செலுத்தி ஒருவர் போய்வரலாம். ஆரம்பத்தில் லயன் எயார் மட்டுமே விமான சேவையை நடத்தியது. இதன்பின் மொனராவும் இச்சேவையில் ஈடுபட்டது. விமானம் வீழ்ந்ததற்குப் பின்னும் கூட சிவில் ராணுவ பயணிகள் தனித்தனியாக இருக்கவேண்டுமென்பது பற்றிய அக்கறை இவ்விமான சேவையினரிற்கு இருப்பதாகத் தெரியவில்லை. இவ்விரு விமானசேவைகளின் போட்டியே இங்கு முக்கியமான தாயிருக்கிறது என்பது மொனரா விமானசேவை முகாமையாளரின் 4.10.98 SUNDAY ISLAND பேட்டியிலிருந்து தெரிகிறது. அவரது பேட்டியின்படி, பாதுகாப்பான பாதை பயன்படுத்தப்பட்டால் புலிகள் எம்மைத் தாக்கவே முடியாது....... யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பாவி மக்களின் நலன் கருதி விமானசேவையை மீண்டும் செயல்பட அரசு அனுமதி தரவேண்டும்...... அரசுக்கு எமது சேவை தேவைப்படும்போது பாதுகாப்புப் படையினரையோ உணவுவகைகளையோ நாங்கள் ஏற்றிச்செல்ல தயாராக உள்ளோம். எமது நாட்டுக்குத் தேவை ஏற்படும்போது இதைச் செய்யத் தயாராகவுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று விடயங்கள் இப்போது தெளிவாகின்றன. லயன் எயார் சுட்டு வீழ்த்தப்பட்டதென்பதும், பாதை பாதுகாப்பற்றதென்னும் எச்சரிக்கையின் பின்னரும் அந்தப் பாதை பின்பற்றப் பட்டதென்பதும் தெரிகிறது.

இராணுவம் பயணிகள் விமானத்தை குத்தகை எடுப்பதை சுலபமாக நிறுத்தியிருக்கலாம். இதற்கான செலவு அப்படியொன்றும் அதிகமாகி விடப்போவதில்லை. கிளிநொச்சி யுத்தத்தில் காயமுற்ற இராணுவத்தினரை ஏற்றுவதற்கு மேலதிகமாக விமானங்கள் தேவைப்பட்டிருந்தால் சிவில் விமான சேவையை நிறுத்தி, விமானப்படை அவ்விமானங்களைப் பெறுப்பெடுத்து தமது விமானிகளைக்கொண்டு ஓட்டுவதே தகுந்த விடயம். "எமது நாட்டைக்காப்பாற்ற வேண்டும்" என்ற விமானசேவை முகாமையாளர்களின் வேண்டுதல் இங்கு தேவையற்றதாக இருந்திருக்கும். இவ்விமான சேவை நிறைந்த லாபமூட்டுவதாக இருக்கும்போது சாதாரணமக்களுக்கு இதிலிருந்து என்ன கிடைக்கப்போகிறது. பல கேள்விகளுக்கு அவர்கள் பதில்சொல்லியாகவேண்டும். விமான காப்புறுதி வரைவிலக்கணப்படி, சட்டவிரோதமான நடவடிக்கைகள் காப்புறுதியில் வரையறுக்கப்பட்ட பூகோள எல்லைக்கு வெளியே அங்கீகரிக்கப்பட்ட விமானியைத்தவிர்ந்த வேறொருவர் ஓட்டினாலோ சிவில் ஆகாய சட்டதிட்டங்களிற்கு வெளியே அது பயன்படுத்தப்பட்டாலோ இக்காப்புறுதி செல்லுபடியாகாது. யுத்தம், கலவரம், வேலை நிறுத்தம் போன்றவைகளால் ஏற்படும் நட்டங்களும் காப்புறுதியுள் அடங்காது.

பூகோள எல்லைகளைப்பார்த்தால் ஒரு காப்புறுதியாளர் இவ்வாறான பாதையை தேர்ந்தெடுக்க அனுமதித் திருந்திருக்கமாட்டார். பாதுகாப்புப் படையினரை ஏற்றிச் செல்வதற்கும் அது இடமளித்திருக்காது. ஒழுங்கான காப்புறுதியாளரிடம் இவர்கள் போயிருந்தால் இந்த விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும். இச்சம்பவத்தில் பலியானவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையென்ன ? அரசும், முக்கியமாகப் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்களும், விமானசேவையினரும் இதற்குப் பதில் சொல்லியேயாகவேண்டும். மௌனம் இதற்குப் பதில் அல்ல. இது நிலைமையை மேலும் மோசமாக்கும். குறைந்தபட்சம் ஒரு ஆறுதல் சொல்லாவது ஜனாதிபதியிடமிருந்து வரவேண்டுமென்பது எதிர்பார்க்கக்கூடியதொன்றே.

தமிழ் மக்களின் நிலை -

இராணுவம் சிவில்சேவைகள் தனியாகப் பேணப்பட வேண்டுமென்பதை தமிழ் மக்கள் ஏன் கேட்கவில்லை யென்பதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. 80களில் மத்தியிருந்து ஆட்சி புரிந்த அரசுகளும், இயக்கங்களும் - குறிப்பாகப் புலிகளும் தமிழ் மக்கள் தமது உரிமைகளை இழந்துவாழ்வது எப்படியென நன்கு பழக்கிவிட்டனர். இராணுவ தேவைகள் விடுதலை போராட்டத்திற்கு அவசியமாகும்போது மக்களின் உரிமைகள் இரண்டாம் பட்சமென்பது புலிகளின் நிலைப்பாடாகும். புலிகளுடனான யுத்தத்தின்போது மக்களின் பாதிப்புகளும் இறப்புகளும் அரசால் கணக்கிலெடுக்கப்படவில்லை என்பது உண்மையே. இன்றைய அரசும் இதற்கு விதிவிலக்கல்ல. சிவில் ராணுவ சேவைகள் பிரிக்கப்படவேண்டும் என்பதன் முக்கியத்துவம் தொடர்ந்து எழுப்பப்பட்டபோதும் பாதுகாப்பு அமைச்சு இதை கணக்கிலெடுக்கவில்லை. மட்டக்களப்பில் விசேட அதிரடிப்படை பொதுமக்களைக் கேடயமாகப் பாவித்து பஸ்களில் பயணம் செய்தது தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கப் பட்டே வந்தது. யாழ்ப்பாண கிராமப்புறங்களில் இராணுவம் இதேபோன்று நடந்துவருவதும் வெளியே தெரிய வந்தது. மன்னாரில் இந்நடவடிக்கைகள் அதன் உச்சக்கட்டத்தை அடைந்தது. பொது மக்கள் பஸ்ஸிலிருந்து இறக்கப்பட்டு இராணுவ பஸ்ஸில் ஏற்றப்பட்டனர். பாதுகாப்புப் படையினருடன் அவர்கள் கலக்கப்பட்டு செட்டிக்குளம் வரை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லப்பட்டனர். செட்டிக்குளத்தில் அவர்கள் தமது பஸ்களில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். மன்னாரின் முக்கிய பிரஜைகள் இந் நடவடிக்கைபற்றி உரிய அதிகாரிக்குத் தெரிவித்தனர். அவர் அதற்கெதிரான நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறியபோதும் இதுவரையும் எவ்வித மாற்றமும் நடைபெறவில்லை. தமிழ் மக்களின் கோரிக்கைகள் மிதமிஞ்சி இருக்கிறது. புலிகள் தமிழரைச் சுட்டால் அது எமது பிரச்சினையல்ல என்பதே இராணுவத்தின் போக்காகவுள்ளது. இரு சாராரும் மக்களைக் கேடயமாகப் பாவிப்பதையே இந்நிகழ்வுகள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. 1993ம் ஆண்டு ஜனவரி 2ம் திகதி யாழ் கடலேரியில் 35 பொதுமக்கள் பயணம் செய்யும்போது கடற்படையினர் அவர்களைப் படுகொலைசெய்தது பொதுமக்களின் பயணத்திலுள்ள ஆபத்திற்கு ஒரு சான்றாகும். அதிகாரபூர்வமான அறிக்கைகளின்படி புலிகளின் இரு படகுகளை கடற்படையினர் அழித்ததாக வழமையான பாணியில் கூறப்பட்டது. எமது 10வது அறிக்கையின் முன்னுரையில் நாம் கூறியதாவது யாழ் கடலேரியில் கடற்படையினரின் இவ்வாறான அராஜக செயல் 35 மக்களைப் பலிகொண்டிருக்கிறது. இது மக்களின் பய உணர்வை மேலும் அதிகரித்துள்ளது. பொதுமக்கள் பயணத்திற்கான எவ்வித கட்டமைப்புகளையும் வளரவிடாமல் தடுக்கும் புலிகளும் இதற்குப் பொறுப்பானவர்களே. பொதுமக்கள் இவ்வாறான பாதகமான சூழ்நிலைகளில் பயணம் செய்யவேண்டியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தை விட்டு 1996ல் புலிகள் வெளியேற்றப்படும் வரை இந்நிலை தொடர்ந்தது. புலிகளின் தந்திரம் என்னவெனில், யாழ் கடலேரியை தங்கள் ராணுவ தேவைகளுக்கு பயன்படுத்துவதை கைவிடாத அதே வேளை மக்களுக்கு வேறெந்த வழிகளையும் காட்டாமல் அவர்களை கேடயமாக பயன்படுத்துவதே. பொதுமக்கள் இதனை வழமை போல ஏற்றுக்கொள்ள பழகினர். புலிகள் திணிக்கும் விடுதலை, பேராபத்துகள் ஊடாக அடையப்படுதல் சகஜமென அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பப் பழகியதுடன் புலிகளை எதிர்க்க அஞ்சும் மனோநிலையையும் வளர்த்துக்கொண்டனர். மக்கள் கடலேரியைக் கடப்பது அத்தியாவசியமாக இருக்கையில் புலிகளும் இதனை சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர். சில சமயங்களில், பல நாட்களாக பயணம் செய்ய ஏக்கத்துடன் காத்திருந்து, முதல் வரும் படகில் முண்டியடித்து ஏறும் பயணிகளுக்கு ஆபத்து பற்றி சிந்திக்க அவகாசம் இருப்பதில்லை. சர்வ தேச நெருக்குதலும் புலிகளின் பிரசன்னமும் கடல் படையை அருகில் விடாது என்ற அற்ப நம்பிக்கையுடன் மாற்று வழி ஏதுமின்றி மக்கள் பயணிப்பர்.

2-1-93 சம்பவத்தின் பின் கடற் படையினர் பெரும்பாலும் கடலேரியிலிருந்து ஒதுங்கி கொண்டது, மனித இழப்புகளை கிஞ்சிற்றும் கருத்திலெடுக்காத புலிகளின் வழமையான பாணிக்கு கிடைத்த வெற்றியே. விமானச் சேவை இன்று நிறுத்தப்பட்டதும் புலிகளின் இதே கைங்கரியத்தின் பலனே. ஒப்பீட்டளவில், பொது மக்களுக்கு விமான சேவை அநுகூலமாயிருந்ததே ராணுவத்தவர் அவ்வப்போது குத்தகை (charter) எடுத்ததை விட முதன்மையாக இருந்தது. மக்களும் இவ்வாறே கருதினர்.

கடலேரி இழப்புகளின் பின் ஆனையிறவு அல்லது பூநகரி ஊடாக மக்கள் பாதுகாப்புடன் பயணம் செய்ய வழி ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற சர்வ தேச அமைப்புகளின் முயற்சிக்கு புலிகள் செவி சாய்க்க ல்லை. (உம்: UNHCR, 1993 ஆண்டு பேச்சு வார்த்தை) ந்க்கு பாதுகாப்பான பாதை தேவை என்பது பற்றி 1995 இன் ஆரம்ப காலங்களில் இன்றைய அரசுடன் புலிகள் முதல் தடவை பேசியது அரசை பூநகரி முகாமை காலி பண்ண வைக்கும் நோக்கிலேயே. மக்களின் அத்தியாவசிய நலன்கள் பாதிக்கப்படும் தருணம் அதற்கு முதலிடம் கொடுப்பதை விடுத்து, ராணுவ தேவைகளை முன்வைப்பது முட்டாள் தனமானது. யாழ்ப்பாணத்தில் கண்ணி வெடி அகற்றலுக்கு அரசு தடையென "HOT SPRING" போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகள் பிரசாரம் செய்கையில், மேற்கொண்ட விடயங்களை வசதியாக மறந்து விடுகின்றன.

புலிகளுக்கு மக்களின் பதில் இதுதான்: *யாழ் கடலேரி ஊடாக எங்களை பயணம் செய்ய நிர்ப்பந்தித்து உங்கள் இராணுவ நலன்களுக்கு எங்களை பாவித்தீர்கள். எங்களுக்கு வேறு வழி தென்படாது உங்களுக்கு நாங்கள் அடிபணிந்தோம். இன்று, சற்று கௌரவத்துடன் பயணம் செய்ய விமான சேவை இடமளித்தது. இடைக்கிடையே விமான சேவையை பாதுகாப்பு படையினர் குத்தகைக்கு அமர்த்துவது பற்றி எமக்கு பிரச்சனை இல்லை. கேள்வி ஏதும் கேட்காமல் கிடைத்ததில் திருப்தி கொள்ள பழக்கியது நீங்களே. ஏனெனில் எமக்கு உரிமை ஏதும் இல்லை என நீங்கள் தான் போதித்தது. உண்பதற்கு மட்டுமே எமக்கு வாய் எனக் கூறி எம்மை ஊமையாக்கியதும் நீங்கள் தான். இன்று, எங்கள் தனிப்பட்ட விடயங்களுக்காக நாம் பயணிப்பதில் தலையிடாமலாவது இருக்கலாம் தானே. எங்களின் உரிமைளை நீங்கள் மதித்திருந்தால்- அதற்கு இடமளித்திருந்தால், நாமும் அதற்காக போராடியிருப்போம். மீறுபவர் யாராயிருப்பினும்- அரசோ, நீங்களோ அல்லது வேறெவரோ நாம் அவர்க்கு எதிராக எழுந்திருப்போம்.*

விமான சேவை அநியாயமாக மக்களிடம் பணம் பறிக்கின்ற தென்ற புலிகளின் முதலைக் கண்ணீர் வடிப்பும் யாழ். மக்களின் பார்வையில் நகைப்புக்குரியதே. மக்களிடம் பணம் பறிப்பதில் புலிகள் ஒன்றும் சளைத்தவர்களல்ல. 200 ரூபா கொழும்பு பயணத்திற்கு 2000 ரூபா அறவிட்டவர்களல்லவா புலிகள். அத்துடன் யாழ்ப்பாண வெளியேற்ற சமயம், திட்டமிட்ட பண அறவீட்டையும் சூறையாடலையும் புலிகள் மேற்கொண்ட பாணி நம்ப முடியாதது. மக்களின் பால் புலிகள் கொண்டுள்ள ஆத்திர உணர்வின் வீச்சு, மாற்ற முடியாத மனநோய்க்கு அவர்களை இட்டு சென்றுள்ளதையே இது காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாலி பயண காலம் தொட்டு புலிகளின் எச்சரிக்கைகளுக்கு மத்தியில் மக்கள் பயணம் செய்து வருகின்றனர். ஓரிரு நாள் வரைக்கும் இதுவே கடைசி படகு என அறிவிப்பு வரும் போது, நிலைமைகளை கருத்தில் எடுக்காமல் மக்கள் தமது அவசரங்களுக்காக பயணிக்கவே செய்தனர். விமான சேவை நிறுத்தப்படுமென்ற வதந்தி அடிபட்ட போதும் இதுவே நிகழ்ந்தது. பயணிகள் விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்துவரென்பதை விமான சேவையினரோ மக்களோ கனவு கூட காணவில்லை. புலிகளை சரியாக எவரும் எடை போடவில்லை என்பதே இவ் அனுபவத்தின் சாட்சி.

புலிகளின் நிலைப்பாடும் அவர்களது கோரிக்கைகளும் எவ்வகையிலும் நடைமுறைக்கு ஒவ்வாத நிலை வரும் போது, தமது சுயரூபத்தை அவர்கள் காட்ட தவறுவதில்லை. "எங்கள் ராணுவ நடவடிக்கைகளுக்கு நாங்கள் உரிமை கோருவோம்" என்ற 70களின் புலிக் கோஷங்கள் இன்று பழைய கதை. யாழ். மக்களுக்கு புலிகளின் பயமுறுத்தல் தெளிவானதே. ஆயினும் திட்டமிடப்பட்டு அவை அங்கீகாரபூர்வமாக வரவில்லை. எனவே, முடிவு காணப்படாத ஓர் குழப்பத்திலே புலிகள் மக்களை இட்டு சென்றனர். விமானப்பயணம் பற்றிய எச்சரிக்கையை எடுத்துக் கொண்டால், புலிகளின் முத்திரையின்றிய கடிதங்கள் தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் பிரிவு அல்லது தமிழீழ மக்கள் நலன் விரும்பிகள் போன்ற பெயர்களிலேயே அனுப்பப்பட்டன. 10-10-98 இல் "யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்" எனப்பெயர் தாங்கிய துண்டு பிரசுரம் மற்றைய விடயங்களுடன் விமான அழிவையும் குறிப்பிட்டு அதற்கு அரசே பொறுப்பெடுக்க வேண்டுமென தெரிவித்தது.

எச்சரிக்கைகளின் பின்னணி பற்றி ஓர் ஐயப்பாடு நிலவியது வாஸ்தவமே. அத்தியாவசிய பயணம் செய்ய வேண்டியவர்கள் இவ் எச்சரிக்கைகள் ஆதாரமற்றவை என நம்பி பயணித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான சேவையினரும் இதனை ஊக்குவித்தனர். எனவே, அந்நியரொருவர், விமான சம்பவத்தில் புலிகளைத் தொடர்பு படுத்தி முடிவுக்கு வருதல் சாத்தியமன்று.

இந்த அறிக்கையை நாம் தயாரிக்கும் போது பிதா தேவசகாயம் பிள்ளை திட்டமிட்ட கட்டுக் கதை ஒன்றின் பலியாளாய் இருப்பாரா என்று கூட நாம் எண்ணிப் பார்த்தோம். ஒரு அடையாள அட்டையை மட்டும் தான் அவரிடம் இருந்தது. சடலங்கள் எதையும் அவர் பார்க்கவில்லை. விமானம் கடத்தப்பட்டு பலவந்தமாக வன்னியில் இறக்கப்பட்டு கூட இருக்கலாம்! ஆனால் இதனை இறுதியில் நாங்கள் நிராகரிக்க வேண்டி இருந்தது. பிதா தேவசகாயம் பிள்ளை சக பாதிரியார்கள் இடமும் தனக்கு தெரிந்த மக்களிடமுமே சென்றிப்பார். அவர் கொண்டு வந்த செய்தி மறுக்க முடியாததும் உண்மையானதும் கூட. விமானம் பலவந்தமாக தரை இறக்கப் பட்டிருப்பின் அதனை மறைத்து வைத்தல் எளிதல்ல. புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் மக்கள் சென்று வருவது சாத்தியமே. மீனவர்கள், வர்த்தகர்கள் இடையிலான தொழில் தொடர்புகளும் புலிகளால் முழுமையாக கட்டுப்படுத்த முடியாததே. இதனால் முழு உண்மையும் எப்படியும் வெளி வந்திருக்கும்.

விமானத்தை சுட்டது தாமே என புலிகள் யாழ் மக்களுக்கு மறை முகமாக நன்கு தெரியப்படுத்தி இருக்கின்றனர். தாம் செய்ததை அங்கீகரிக்கவோ மறுக்கவோ புலிகள் முன்வரப்போவதில்லை. மறுத்தால் மக்கள் பயணத்தை தொடர்வர். ஏற்றுக்கொண்டால் சர்வதேசரீதியான கண்டனத்தை சுமக்க நேரிடும். இவ்வகையில் செய்தி நிறுவனங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் தங்களுக்கு சாதகமாக புலிகள் பயன்படுத்துகின்றனர். புலிகளின் குற்றச் செயல்களுக்கு கைரேகை அடையாளம் போன்ற விஞ்ஞான சாட்சியங்களுக்கு அன்றிலிருந்து இன்று வரை இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களின் குழப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு எவ்வித சலனமுமின்றி இயங்கும் இந்த சக்தியை பற்றிய எங்கள் குழப்பத்திலிருந்து நாம் எப்பொழுது மீளுவோம்?

விமான பேரழிவை அரசு கையாளும் பாணியும் புலிகளுக்கே லாபத்தை ஈட்டும் வகையில் இருக்கிறது. இவ்விடயம் பற்றி அரசு இக்கட்டுக்குள்ளாகும் போதெல்லாம் அது அக்கறையின்றி இழுத்தடிக்கும் போக்கைக் காணலாம். செம்மணி புதைகுழிகள் விசாரணை பற்றிய அரசின் வாக்குறுதிகளும் ஆரம்பத்தில் காட்டிய ஆரவாரங்களுக்கும் பின்பு, மக்கள் காத்திருந்து ஏமாந்தது போன்றே இந்த விடயத்திலும் நடக்கும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். வடக்கில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை பற்றி நிர்வாக ஒழுங்கீனம் போன்றே விமான வீழ்ந்தது சம்பந்தமான விசாரணையும் இழுத்தடிக்கப்படுகின்றது.

மிகப் பாரதூரமான குற்றங்களில் ஒன்றான இத்தாக்குதலை சிவில் விமான நிறுவனத்தின் உப தலைவரினால் விசாரணை நடாத்தவிருக்கும் அரசின் முடிவு உள் நிர்வாக தேவைகளுக்கு பயனுடையதாய் இருக்கலாம். ஆனால் இது ஒரு உண்மையான உள்நோக்கமற்ற விசாரணையாக இருக்கமாட்டாது. பாரபட்சமற்ற சர்வதேச அவதானிகள் அடங்கிய ஒரு குழுவே சந்தேகத்துக்கிடமின்றி விசாரணையொன்றை நடத்த தகுந்தது. அரசு குற்றச்சாட்டப்படும் பட்சத்தில் அரசு அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப்பக்குவம் வாய்ந்ததாகவிருக்க வேண்டும். இல்லையெனில் நம்பிக்கையின்மையே தொடரும்.

************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

(இவ்வறிக்கையை மொழிபெயர்த்து வெளியிட்ட, மனித உரிமைகளுக்கான உலகத் தமிழர் அமைப்பினர் எழுதிய முன்னுரை.)

அகதிகளாக சொந்த நாட்டை விட்டு வந்த எமக்கு, யுத்தத்தில் அமிழ்ந்து போன எமது தேசம், எம் மக்கள், எம் உறவுகள் பற்றிய ஏக்கங்கள் வாழ்வின் ஒரு அங்கமாக இருப்பது யதார்த்தமே. சிதறிப் போனது எமது சமூக வாழ்வு. போர்க் குரல்களின் உச்சஸ்தாயி, சாதாரண மக்களின் அவலங்களை மறைக்கிறது. உயிர் வாழ்வுக்கான அவர்களது வேண்டுகோள்கள், வீரச் செயல்கள், வெற்றிகள் போன்ற யுத்த முழக்கங்களின் பேரோசைகளுள் ஒடுங்கி ஈனக் குரலாக ஒலிக்கின்றது. இந் நிலையில், அகதிகளான நாம், எமது மக்கள், உறவுகள் பற்றிய செய்திகளை அறிய தினமும் தமிழர் செய்தி நிறுவனங்களை நாடுகிறோம். ஆனால் புலம் பெயர்ந்த மக்களின் இந்த உணர்வுகளை பெரும்மூலதனமாக்கி வரும் ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளிருந்து செயல்படும் தமிழர் செய்தி நிறுவனங்கள் (வானொலிகள் உட்பட), எமக்குச் செய்யும் பணி தான் என்ன ?

புலம் பெயர்ந்து வாழும் தமிழர் மத்தியிலுள்ள தமிழர் செய்தி நிறுவனங்களின் நேர்மையீனம் தமிழ்மக்கள் பலரிற்குப் புரியாததொன்றல்ல. யுத்தத்தில் சீரழிந்துவரும் எமது தேசத்தில் தொடர்ந்து வரும் அட்டூழியங்களை அறிய முனையும் அகதிகளின் நியாயமான ஏக்கங்களைக் காசாக்குவதை மட்டுமே குறியாகக் கொண்டுள்ள இந்நிறுவனங்கள், உண்மை நிலைமைகளை மறைத்தும் திரித்தும் கிளர்ச்சி ஏற்படுத்திப் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களை குசிப்படுத்தும் செய்திகளை வெளியிட்டு வருவதில் சமர்த்தர்கள். எனினும், இச்செய்திநிறுவனங்கள் புலம் பெயர்ந்த தமிழர்களின் விடுதலை உணர்வை - தமிழ் மரபைக்காக்கவும், ஈழத்தமிழர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக் குரலை உலகிற்கு உணர்த்தவும், அவர்களின் அன்றாட துன்ப துயரங்களை வெளிக் கொணர்ந்து அதற்குக் காரணமான அடக்கு முறையாளர்களை அம்பலப்படுத்தவும், தங்களை அர்ப்பணித்துள்ளதாகவே தம்மைப் பிரகடனப் படுத்திவருகின்றன. இவைகளின் கபடத்தனங்களை அம்பலப்படுத்துவதே இச்சிறு பிரசுரத்தின் நோக்கமாகும்.செய்தி நிறுவனங்கள் அனைத்திற்கும் ஒரு சமூக அரசியல் பார்வை உண்டென்பது பற்றி எவருக்கும் ஆட்சேபனை வரப் போவதில்லை. தமிழர் செய்தி நிறுவனங்களிற்கும் அவ்வாறான பின்னணி இருப்பது பற்றிய விவாதத்திற்கு நாம் வரவில்லை. கேள்வியென்னவெனில், தமிழர் செய்தி நிறுவனங்கள் குறைந்த பட்சம் தாம் கூறிக்கொள்ளும் தமிழர் நலன் காக்கும் விடயத்திலாவது நேர்மையாக இருக்க வேண்டுமென்பதே. செய்தி நிறுவனங்கள் அனைத்தும் ஏதோ ஒருவகையில் சில செய்திகளை இருட்டடிப்புச் செய்வது வாஸ்தவம்தான். ஆனாலும் செய்தி நிறுவனங்களிற்கு என்றொரு அறநெறியுண்டு. இதனை பத்திரிகாதர்மம் என்பர். குறைந்தபட்சம், நடக்கும் சம்பவங்களை திரிக்காமல் கூறுவதும், அதிகாரத்திற்கு அஞ்சாமல் செய்தி சுதந்திரத்தைக் காப்பதுவும் இந்த அறநெறியின் அடித்தளங்கள். இது சர்வதேச ரீதியாக பத்திரிகாதர்மமாக ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். செய்திகளை வெளியிட்டு அதனை அலசுவதும், அதற்கான பின்னணிகளைத் தமது அரசியல் சமூக பார்வைக் கூடாக வடிகட்டுவதும் செய்தி நிறுவனங்கள் தம்மை நடு நிலையாளர்கள் எனக் கூறிக் கொண்டாலும் நடப்பதொன்றே. இது தவிர்க்க இயலாததும் கூட. ஆனால், தமிழர் செய்தி நிறுவனங்கள் பத்திரிகை அறநெறிகளுக்குள் தம்மை கொஞ்சங் கூட அடக்குவதில்லை. நடந்த சம்பவங்களை முழுமையாக மறைக்கும் கைங்கரியமே புலம் பெயர்ந்த செய்தி நிறுவனங்களின் உன்னத கடமையாக இருக்கின்றது. இதற்கொரு அண்மைய எடுத்துக்காட்டு லயன் எயார் சம்பவம். இலங்கைத் தமிழ் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டுள்ளதாக பாவனை செய்து தமது வியாபாரத்தை அதிகரித்துவரும் இந்நிறுவனங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்களின் நலன்களில் எத்துணை அக்கறை கொண்டுள்ளனர் என்பதைக்காட்ட லயன் எயார் சம்பவம் ஒன்றே போதுமானது.

தமிழ் மக்களின் நலன்களில் சொற்ப அக்கறை மட்டுமே கொண்ட எந்த நிறுவனமோ, இயக்கமோ, தனி நபரோ சாதாரண தமிழ் மக்களின் நலன்களுக்கு பாதகமாக யார் நடந்தாலும் அதனைக் கண்டிக்கவோ குறைந்த பட்சம் அதனை வெளியிடவோ முயல்வர். இதனைக்கூடச் செய்யமுன்வராத எவரும் தமிழரின் நலன்களை முன்னெடுப்பவர் எனப் பிரகடனப் படுத்துவது கேலிக்குரியதே. ஓர் அமைப்பின் பிரச்சார பிரிவு தனக்குப் பாதகமான செய்தியை இருட்டடிப்புச் செய்வதோ, திரித்துக் கூறுவதோ வேறு விடயம். ஆனால், தம்மை சுயாதீனமான செய்தி நிறுவனங்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் இவ்வாறான இருட்டடிப்புகளில் ஈடுபடுவது இவர்களின் நேர்மையீ னத்தையும், மனச்சாட்சி இன்மையையும் காட்டுவது மட்டுமல்ல இவர்கள் தமிழ் மக்களின் நலன்களை கருத்தில் கொண்டவர் களல்ல என்பதையும் வெளிப்படுத்துகிறது. சாதாரண மக்களிற்கு எதிரான இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களையும், இராணுவவன்முறைகளையும் வரிக்குவரி எழுதியும் வானொலியில் முழங்கியும் வரும் இவர்கள், அப்பாவி மக்களை விடுதலைப் புலிகள் கொல்லும் போது மட்டும் மௌனம் சாதிப்பது மட்டுமல்ல அது சம்பந்தமான செய்திகளைக்கூட திட்டமிட்டு மறைத்து விடுவது அல்லது தாங்களே கற்பிதம் செய்து செய்திகளை உருவாக்குவது போன்ற பொய்மைகளில் தம்மை ஈடுபடுத்து கின்றனர். சிங்கள ராணுவம் தமிழ் மக்களைக் கொன்றால் மனித உரிமை மீறல். அதே மக்களை விடுதலைப் புலிகள் கொன்றால் மௌனம் அல்லது செய்தித் திரிப்பு. இவர்களின் அகராதியில் மனித உரிமை இவ்வாறே அர்த்தமுள்ளது போலும்.

பிரபல்யமான புகலிட செய்தி நிறுவனங்களின் இவ்வாறான போக்கானது பத்திரிகா தர்மத்திற்கு ஒவ்வாததும் ஆபத்தானதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல, தமிழ் மக்களின் நீண்ட கால சுபீட்சத்திற்கும் அவர்களது விடுதலைக்கும் பாதகமானதாகவே அமையும். லயன் எயார் விமானம் வீழ்ந்த போது தமிழர் செய்தி நிறுவனங்கள் செய்தித் திரிப்பு செய்தது மட்டுமல்ல துரதிருஸ்ட சம்பவம், காணாமல் போனது போன்ற பொய்க் கதைகளையும் புனைந்து பூசி மெழுகியதும் நிகழ்ந்தது. லயன் எயார் விமானம் வீழ்ந்தது சம்பந்தமான இவர்களின் தகவல்கள் எவ்வளவு தூரம் உண்மைக்குப் புறம்பானதென்பதற்கு மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களின் (UTHR) விவரணமான அறிக்கை சான்று. UTHRன் செய்திகள் எந்த அளவிற்கு உண்மையானவை என்ற செய்தி எம்மில் பலரிற்கு எழலாம். ஆனால் UTHRன் செய்தி வதந்திகளின் அடிப்படையில் எழுதப் படவில்லை. யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் செய்திகள், விமானம் வீழ்ந்த இரணை தீவுப் பகுதிக்குச் சென்ற பாதிரியாரின் பேட்டி, இரணைதீவு மக்களின் வாக்கு மூலம், யாழ்ப்பாணப் பகுதியில் விமானம் விழுமுன் நிகழ்ந்தவை தொடர்பான ஆய்வு, விமானியின் வான்வழிச் செய்தி போன்ற பல்வேறு தகவல்களின் தொகுப்பும் ஆய்வுமே UTHR செய்தியின் பின்னணி. நாம் ஏற்கனவே கூறியிருந்தபடி அரசியல் சமூக பார்வையின்றி செய்திகள் நடுநிலையாக வருவதில்லை. ஆனாலும் நடந்த சம்பவங்கள் அதன் பின்னணிகள் பற்றிய முழுமையான பதிவை UTHR தருகின்றது.

UTHRற்கான அரசியல் பார்வையை நாம் மதிப்பீடு செய்வதெனில் அதன் அரசியலானது மனித உரிமை, ஜனநாயகம் ஆகிய விழுமியங்களைக் கொண்டதென நாம் கூறலாம். இதன் சமூக அரசியல் பார்வை UTHR தோற்றங் கொண்ட காலத்திலிருந்து தொடர்ந்து பேணப் படுகின்றது என்பதற்கு அவர்களின் தொடர்ந்த அறிக்கைகள் மட்டுமல்ல, அவர்களின் நடைமுறையும் சான்று. இந்திய சமாதானப் படையினரின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து வெளிக் கொணர்ந்த காலம்தொட்டு இன்றுவரை மனித உரிமைகளுக்கெதிரான கைகள் எங்கிருந்து வந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைக் கண்டிக்க அவர்கள் தயங்கியதில்லை. குறுகிய அரசியல் லாபம் கருதி தம்மை ஒரு சார்பு நிலைக்குள் குறுக்கிக் கொள்ளவும் UTHR முயலவில்லை. விடுதலை என்பது வெறும் கோசமல்ல. அது மக்களின் சகல ஜனநாயக உரிமைகளின் பிரதிபலிப்பு. மனித உரிமைகளும் ஜனநாயகமும் விடுதலையின் பின் திறந்து விடப்படும் என்பது பொய்மை. மக்களின் விடுதலை என்பது அவர்களின் ஆன்ப பலத்தில் தங்கியுள்ளது என்பதிலும் UTHR நம்பிக்கை கொண்டுள்ளதை நாம் உணரலாம். மக்களின் ஆன்ம பலத்தை அழித்துவிட்டு, அவர்களின் அற்ப சொற்ப உரிமைகளையும் நசுக்கிக் கொண்டு விடுதலை சேவது அர்த்தமில்லையென UTHR கூறுகின்றது. அதனால் மக்களை நெரிக்கும் சகல சக்திகளையும் UTHR பாரபட்சமின்றிக் கண்டிக்கத் தயங்கவில்லை. UTHR இன் அறிக்கை முழுமையானதாகவும், இலங்கைத் தமிழர்களின் நெருக்கடிகளை வெளிக் கொணரும் சாதனமாகவும் தொடரந்து செயற்பட்டு வருகிறது.இதற்கிடையே, எமது திண்ணைப் பேச்சு வீரர்கள் சிலர், UTHR யாழ்ப்பாணத்தில் மையம் கொள்ளாமல் தன்னை யாழ்ப்பாண பல்கலைக் கழகம் என அழைப்பது கண்டனத்துக்கு உரியது, தவறு என வேதாந்த விளக்கங்கள் கொடுப்பதில் மட்டும் விற்பன்னராக விளங்குகின்றனர். இந்த வேதாந்திகள், UTHR வெளியிடும் செய்திகளை எதிர் கொள்ளவோ அதற்கு பதிலளிக்கவோ வக்கற்ற நிலையில் முட்டையில் மயிர் புடுங்குவது மட்டுமல்ல, UTHR யாழ்ப்பாண பல்கலை கழகத்தில் நிலை கொள்ள முடியாத நெருக்கடி சூழலை வேண்டுமென்றே மறைக்கவும் செய்கின்றனர். இந்திய ராணுவம் யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டுள் வைத்திருந்த போது நிகழ்ந்த அத்துமீறல்கள்களுக்கு எதிராக, UTHR மட்டுமே ஓர் சுயாதீன அமைப்பாக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்திலிருந்து கொண்டு குரல் கொடுத்த விடயம், சமாதான காலங்களில் மட்டும் விடுமுறைக்கு இலங்கை செல்லும் இக் கனவான்களுக்கு சுலபமாக மறந்து விடுகிறது. தமது முக்கிய உறுப்பினரான விரிவுரையாளர் ராஜனி திரானகம புலிகளால் கொல்லப்பட்டதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து மற்றைய உறுப்பினர்ககளும் ஆதரவாளர்களும் யாழ். பல்கலை கழகத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் பற்றி பொது மக்கள் இலகுவில் புரிந்து கொள்வர். UTHR இதை தெளிவாக பின்வருமாறு கூறுகிறது.

"ஆயிரக்கணக்கான இளைஞர் தங்களை இந்த யுத்தத்தில் அர்ப்பணிக்கின்றனர். இந்த உண்மையான அர்ப்பணிப்பை நாம் மதிக்கும் அதே வேளை, இவ் இளைஞர்கள் தங்களை அறியாமல் எமது சமுகத்தை புதை குழிக்குள் அழைத்து செல்வது மட்டுமல்ல, தங்களையும் அழித்து கொள்கிறனர் என உணர்கிறோம்., இதனை வெறுமனே பார்த்து நிற்பதன் மூலம் நாம் எமது பல்கலை கழக பதவிகளை மட்டும் தக்க வைத்து கொண்டிருக்கலாம். ஆனால் எமது சமுக கடமையிலிருந்து நாம் தவறியவர்களாயிருந்திருப்போம். UTHR என அடையாளம் காணப்பட்டவர்கள் பல்கலைக் கழகத்தில் வழமை போல் செயற்பட முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்ட போது, நிர்வாகம் இதனை ஓர் தனித்துவமான பிரச்சனையாக பார்க்காமல், வெறுமனே சட்ட சம்பந்தமான பிரச்சனையாக அணுகி எமது பதவிகளை பறித்தது. ஆனாலும், பொது மக்கள் மேல் சுமத்தப்பட்ட சொல்லொணா துயரங்களை கருத்தி லெடுக்கையில், எமது பதவிகளுக்காக மௌனம் சாதித்து உண்மையை மறைக்க எமது மனச்சாட்சி இடம் தரவில்லை."

எனவே, தமது வெளியேற்றம் நிர்வாகத்தின் தவறான முடிவென UTHR கருதும் வரையும், தாம் அங்கு செல்வது பாதுகாப்பானது என அவர்கள் உறுதி செய்யும் வரையும், தம்மை யாழ். பல்கலைக் கழகத்தின் ஓர் அங்கமாக கருதுவதில் தவறேதும் இல்லை. யாழ். வெளியேற்றத்தின் போது வன்னிக்கு சென்ற பல்கலைக் கழக மாணவ, ஆசிரியர்கள் தம்மை தொடர்ந்தும் யாழ். பல்கலைகழகத்தின் அங்கமாக பிரகடனப் படுத்தியது எந்தளவுக்கு நியாயமானதோ, அதே அளவுக்கு UTHR தன்னை பல்கலை கழகத்தின் அங்கமாக கருதுவது நியாயமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல UTHR இன் தகவல்களுக்கு பதிலளியாமல் அதன் பெயரில் குற்றம் காண்பது கையாலாகாத் தனமே.

வெளிநாடுகளில் வாழும் நாம் அனைவரும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களைப் போலன்றி பாதுகாப்பான வாழ்க்கையை வாழ்கிறோம். எம்மில் பலர் பல்வேறு காரணங்களால் சொந்த நாட்டில் வாழ முடியாமல் தொலை தூரம் வந்துவிட்டோம். எனினும், எம்மளவிற்கு வசதி இல்லாதவர்கள் பலரும், தமது நாட்டை விட்டு வர விரும்பாதவர்கள் சிலரும் தொடர்ந்தும் பல்வேறு அடக்கு முறைகளுக்குள் இருந்து கொண்டும் அற்ப நம்பிக்கையுடன் சீவிக்கின்றனர்.

லயன் எயார் சம்பவத்திற்கு புலிகளே பொறுப்பு என வெளிப்படையாக தெரிந்தும் முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கும் ஐரோப்பிய தமிழ் பத்திரிகைகள் ஒருபுறமிருக்க, எம்மவரில் ஒருசிலர் "புலிகள் எச்சரிக்கை செய்தபின்னும் பயணம் செய்ததால் சுடுவார்கள் தானே" என பொறுப்பற்ற தன்மையுடன் பேசுகிறனர். ஒரு கல்யாணத்திற்கோ, பிறந்தநாள் விழாவிற்கோ சற்றுப் பிந்திப் போனால் லண்டன் போக்குவரத்து நெரிசலைப் பற்றி நீண்ட நேரம் விலாவாரியாகப் பேசும் நாம், சகல கதவுகளும் மூடப்பட்டிருக்கும் வேளையில் வேறு வழியில்லாமல் தங்களது உறவினரைப் பார்க்கவோ, கல்வி சம்பந்தமாகவோ, மருத்துவ தேவை நிர்ப்பந்தம் காரணமாகவோ செல்லும் பயணிகளை இவ்வாறு விமர்சிப்பது பொறுப்பற்றதனமே.

புலிகளின் தாக்குதல் காரணமாக விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டதுடன், கப்பல் சேவையும் நின்று விட்டது. நவம்பர் 8ம் திகதிய வீரகேசரிச் செய்திகளின்படி கொழும்பு வந்த 114 யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் தங்கள் பரீட்சையில் பங்கு கொள்ள முடியாது நிர்க்கதி அடைந்துள்ளனர். இவர்களை போன்று பல்வேறு பிரச்சினைகளுடன் கொழும்பில் அரச சோதனைகள், துன்புறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக முடியாமல் தமிழ் மக்கள் துன்புறுகின்றனர்.20வெளி நாட்டில் இருக்கும் நாம் எமது குழந்தைகளின் கல்வியில் எவ்வித குறைவும் விடுவதில்லை. ஆனால் இலங்கையில் இருப்பவர்களின் கல்விக்காக நாம் ஏதாவது கொடுக்காது விட்டாலும்கூட குறைந்தளவு பொறுப்புணர்ச்சியுடனாவது நடந்துகொள்ளவேண்டும். லயன் எயார் சம்பந்தமான பின்வரும் UTHRன் அறிக்கையின் சாரம் எமக்குக் குறைந்தளவாவது பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பதுடன் எம் மத்தியில் உள்ள தமிழ் வானொலிகள், பத்திரிகைகளின் நேர்மையீனத்தையும் வெளிப்படுத்துமென நாம் நம்புகிறோம்.

**************

International Tamils for Human Rights
தொடர்புகளிற்கு
ithr@end-war.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REPORTS

No. 1 : January 1989 -[n.d] -4Opp.

No. 2 : March end 1989 -[n.d] -66pp.

No. 3 : January/August 1989.-Nov. 1989.-86pp.

No. 4 : The War of June 1990. -Early Aug.1990. - 70pp.

No. 5 : August: A Bloody Stalemate. 10th Sept. 1990. 67pp.

No. 6 : The Politics of Destruction and the Human Tragedy (Sept.1990 - Jan.1991). -4th Feb. 1991. - 114pp.

No. 7: The Clash of Ideologies and the Continuing Tragedy in the Batticaloa and Amparai Districts. 8th May 1991-90pp.

No. 8: The Debasement of Law and of Humanity and the Drift Towards Total War.- 28 Aug. 1991 -83pp.

No. 9: The trapped People among Peacemakers and Warmongers.- 18th Feb.1992.-62p

No.10: Rays of Hope Amidst Deepening Gloom.-15th January 1993.

No.11: Land, Human rights & The Eastern Predicament. -15th April 1993.-1O6pp

No.12: A Sovereign Will To Self-Destruct-The Continuing Saga of Dislocation & Disintegration.-15th Nov.1993.-87pp.

No.13: Frozen Minds & The Violence of Attrition, 15th June 1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SPECIAL REPORTS :

No. 1 : The Bombing in Jaffna. -[25th Aug.1990]-11pp.

No. 2: (Provisional): "Operation Major" - The Sri Lankan Military Operation in the Islands off Jaffna, August end 1990. -Sept. 1990.- 10pp.

No. 3 : The War and its Consequences in the Amparai District.-16th Oct.1990. - 84 pp.

No. 4 : The Sullen Hills, The Saga of Up Country Tamils.-Jan. 1993.- 70pp

No. 5 : From Manal Aru To Weli Oya and The spirit of July 1983.-15th September 1993.- 21pp

No.6 : The Exodus -6th December 1995

No.7: Jaffna: The Contest Between Man & the Beast Within : 29th August 1996 - 36pp

No.8:Trincomalee:State Ideology And The Politics Of Fear: 7th March 1997 -38pp

No.9:Jaffna:A Vision Skewed : 7th June 1997 -48pp

No.10 :Living Through Jaffna's Sultry Sunset: 09th April 1998-121pp

No: 11: A Tamil Heroine Unmourned & The Sociology Of Obfuscation: 15th September, 1998-

Briefing No.1: Human rights and The Issues of War and Peace. Aug.1992- 20pp.

Briefing No.2 : Children in the North - East war: 1985-1995, 20th June,'95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BULLETINS:

No 3: The Peace process & the incident near S .Sebastian's, Mannar 15th Oct '94

No 4: Padaviya-Welioya:Bearing the burden of Ideology 13th,Feb.1995

No 5: Women prisoners of the LTTE 8th March 1995

No 6: Report on the situation in the Batticaloa & Amparai Districts 9th June,'95

No.7: The military operation & its after effects 4th Sep 1995.

No.8: Civilians & the Jaffna offensive 8th November 1995

No.9: Civilian and the armed forces in the Batticaloa Districts, December, 1995.

No10: Massacre in Kiliveddy, Trincomalee District , Feb. 1996.

No.11: The Quest for Economic survival & Human Dignity: Batticaloa & Amparai Districts: June 1996. : 9th July 1996

No.12: Vanni: A People Crushed Between Cycles of Violence : 22nd October 1996

No.13: An Appraisal of New Trends in Jaffna & Concern Over Detainees : 27th December 1996

No 14: Jaffna: Current Situation & Prospects - A Survey : 24th August 1997

No. 15: The Vanni: Behind the war of words : 4th November 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

No. 16: The outrage at Thampalakamam - The hidden reality
: 5th February 1998

No. 17: Countdown in the Vanni - Looking Beyond the Tigers
: 27th May 1998

No. 18: The Drift In Jaffna:The Urgency Of A Political Settlement & The Importance Of Larry Wijeratne's Legacy: 8th July 1998

No.19: Lionair Flight 602 From Jaffna:Crossing The Bar Into The Twilight Of Silence:16th October 1998

## STATEMENTS

* Renewal of hostilities : Keeping issues in perspective, 8th May '95

* Srilanka Civilian well being in a time of war: A lost hope? 10th Oct 95.

* The Murder Of Rev. Arulpalan And The Government's Denial,
:11th October 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UTHR(J)*

* மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்)-UTHR(J), 1988ல் தேசிய மட்டத்திலான மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் என்ற அமைப்பின் ஓர் அங்கமாக யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ் வமைப்பின் வெளிப்படையான பல்கலைக்கழகச் செயற்பாடானது, 1989 செப்ரம்பர் 21ம் திகதி கலாநிதி ராஜனி திராணகம கொல்லப்பட்டதை அடுத்து இடை நிறுத்தப்பட்டது. 1990களில் இவ்வமைப்பின் செயற் பாட்டில் வெளிப்படையாக முன் நின்றவர்கள் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறும் நிர்ப்பந்தம் உருவானது. சுயாதீனமான, சுதந்திரமான எவ்வித செயற்பாடுகளையும் தடுத்து அழித்தொழிப்பதை பிரதான போக்காகக் கொண்டுள்ள இன்றைய ஆதிக்க அரசியல் சூழலுக்கு நாமும் சரணடைவதா? அல்லது அதற்கு எதிராக முடியுமான வரையில் உறுதியாகப் போராடுவதா என்னும் சவால் எமக்கு விடுக்கப்பட்டது. அதற்கு முகங்கொடுத்து மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) தொடர்ந்தும் *"எமது சமூகத்தை முடமாக்கியுள்ள உள்-வெளி பயங்கரவாதங்களை எதிர்த்து அவற்றின் காரண கர்த்தாக்களை கேள்விக்குட்படுத்தி எமது சமூகத்தின் சமூக-அரசியல் தளங்களில் மனிதநேயத்தை மீண்டும் நிலைபெறச் செய்வதற்கான இடைவெளியை உருவாக்குவது"* என்ற அதன் அடிப்படைக் குறிக்கோளை மையப்படுத்தி செயற்பட்டுவருகிறது.

UTHR(J) தற்போது ஆரம்பகாலம் போன்று யாழ் பல்கலைக்கழகத்தில் செயற்படுவதில்லை என்பதையும் அது ஏன் அவ்வாறு செயற்படமுடியாது என்பதும் யாவரிற்கும் தெரிந்தவொன்றாகும். ஐரோப்பிய மனித உரிமைகள் நிதியம் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் ஒத்துழைப்பு அதன் செயற்பாட்டுக்கு உறுதுணையாக தொடர்ந்து இருந்துவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org